# மலையக மக்களின்
# சமய நம்பிக்கைகளும்
# சடங்கு முறைகளும்

கலாநிதி ந. வேல்முருகு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் அன்பிற்குப் பாத்திரமான

திரு. மாத்தளை கார்த்திகேசு அவர்கட்கு,

மிக்க அன்புடன்,

ந. வேல்முருகு

5. 9. 93.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலையக மக்களின்
# சமய நம்பிக்கைகளும்
# சடங்கு முறைகளும்

ந. வேல்முருகு, M. A., Ph. D.

வாசகர் பதிப்பகம்,
யாழ்ப்பாணம்.

1993

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும்
சடங்கு முறைகளும்.

முதற் பதிப்பு: யூலை 1993,

வெளியீடு: வாசகர் பதிப்பகம்,
857, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அச்சுப்பதிப்பு: செனித் அச்சகம்,
192, கொட்டு கொடல்ல வீதி,
கண்டி.

பக்கங்கள்: iii + 43

Religious beliefs and rituals
of the Upcountry Tamils

First Edition: July 1993

Publication: Vasagar Pathippagam,
857, Navalar Road,
Jaffna.

Printer: Zenith Line
192, Kotugodella Vidiya,
Kandy.

Pages: iii + 43

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| முகவுரை | ... i - iii |
| மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் | |
| சடங்கு முறைகளும் | ... *1 - 33* |
| குறிப்புகளும் உசாவியவையும் | ... *34 - 41* |
| பின்னிணைப்பு (விவரத் திரட்டு) | ... *42 - 43* |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

இந்தியாவிற் பிரித்தானியரின் ஆட்சி நிலை நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து இந்திய மக்கள் பல்வேறு தேவைகளுக்காகவும் நோக்கங்களுக்காகவும் பிரித்தானியரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த உலகின் பல நாடுகளுக்கும் சென்று தற்காலிகமாகவும் நிரந்தரமாகவும் வாழத் தொடங்கினர். இந்தியாவிலிருந்து ஒரு சில மைல்களுக்கு அப்பால் நேச நாடாகவும், அயல் நாடாகவும் உள்ள இலங்கைக்கும் பல்லாயிரக் கணக்கான இந்தியர்கள் வந்து நாளடைவில் நிரந்தரமாகப் பல தலைமுறைகளாக வாழ்ந்து வருகின்றனர். ஒரு பெரிய ஆலமரத்தின் பல விழுதுகளாக அம் மக்கள் பல நாடுகளிலும் வேரூன்றியுள்ளனர். அவ் 'விழுதுகளில்' ஒன்றின் சில முக்கியமான அம்சங்களை ஆராய வேண்டுமென்னும் ஆவல் பல தசாப்தங்களாக என் மனதிலும் வேரூன்றியிருந்தது.

ஆரம்பப் பள்ளிச் சிறுவனாக என் பெற்றோருடன் மாத்தளைக்கு அண்மையிலுள்ள உக்குவளை என்னும் ஊரில் சில வருடங்கள் நான் வாழ்ந்த போது, அடிக்கடி அண்மையிலிருந்த தோட்டங்களுக்குச் சென்று என் நண்பர்களுடன் அளவளாவி, உலாவி, விளையாடி, உண்டு, உறங்கி மகிழ்ந்ததுண்டு அத்துடன் மலையக மக்களது வாழ்க்கை நிலைமைகளை மிக உன்னிப்பாக அவதானித்தும் வந்ததுண்டு. மாலை வேளைகளிலும், இரவிலும் மெல்லிய ஓசையாக என் செவிகளுக்கு எட்டிய உடுக்கின் ஒலியும், இன்பத்திலும் துன்பத்திலும் ஒலிக்கும் ஏனைய இசைக்கருவிகளின் ஓசைகளும் என் அடி மனதில் ஆழப் பதிந்துள்ளன.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் நிரந்தர விரிவுரையாளனாகக் கடமை புரியத் தொடங்கிய பின்னர் ''இலங்கைப் பெருந்தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவழியினரின் சமூகப் புவியியல்'' என்னும் ஆய்வேட்டினைப் பேராதனைப் பல்கலைக் கழகத்திற்குச் சமர்ப்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவ் ஆய்வேட்டில் அமைந்துள்ள இயலொன்றினை 'மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்' என்னும் தலைப்பிட்டுச் சிறு நூலாகப் பிரசுரிப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

1981 ஆம் ஆண்டில் மலையக மக்கள் வாழ்ந்த முழுப் பிரதேசமும் இவ்வாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதனால் முழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையும் இவ்வாய்விற்குட்படலாயிற்று. குறிப்பாக மலையக மக்கள் வாழ்ந்தபதியொரு மாவட்டங்களும் இவ்வாய்விற்குட்பட்டன.

மலையக மக்கள் வாழும் பகுதிகளில் பிரதேச வேறுபாடுகள் இருப்பது கண்கூடு, பல தசாப்தங்களாகத் தேயிலைக் கைத்தொழிலுடன் தொடர்புடையதான உயர் நிலம் (1220 மீற்றருக்கு மேற்பட்ட உயரம்), இடைநிலம் (610 - 1220 மீற்றர் உயரம்), தாழ் நிலம் (610 மீற்றருக்கு கீழ்ப்பட்ட உயரம்), என்னும் மூன்று வலய வேறுபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன. தேயிலைக் கைத்தொழிலுடன் தொடர்புடைய இம் மூன்று வலய வேறுபாடுகள் தேயிலையின் தரத்துடன் தொடர்புடையனவாகவும் அவை காலநிலைச் சூழலுடன் நெருங்கிய தொடர்பு கொண்டும் உள்ளன. ஆனால் யதார்த்தத்தில் உயர், இடை, தாழ் நில வேறுபாடுகள் காலநிலையால் மாத்திரம் நிர்ணயிக்கப்படாது, நிலப்பயன்பாடு, பெருந்தோட்ட முகாமைத்துவம், உற்பத்தித் திறன், சமூக நிலைமைகள் என்பனவற்றிலும் வேறுபட்டுள்ளன. எனவே இவற்றை மனங்கொண்டு உயர் நிலப்பிரதேசம், இடைநிலப் பிரதேசம், தாழ் நிலப் பிரதேசம் என்னும் மூன்று பிரதேசங்கள் இனங்காணப்பட்டு, இவ்வாய்வு மேற்கொள்ளப்படலாயிற்று.

கொவரகல, கிறேக், கோடன், டன்சினானே, வோல்றிம், லக்சபான ஆகிய உயர் நிலப் பிரதேசத் தோட்டங்களும், வலபொட, கவுபே, பனாவத்தை, கிறேகெட், டெல்ரா, பிற்றகந்தை ஆகிய இடைநிலப் பிரதேசத் தோட்டங்களும், ஆண்டபன, பெந்தோட்டை, அம்பத்தென, முவன்கந்த, லெவகந்த, நோத் மாத்தளை ஆகிய தாழ்நிலப் பிரதேசத் தேட்டங்களும் ஆய்வுக்குட்பட்டன.

முதனிலை ஆதாரங்கள், துணை ஆதாரங்கள், உரையாடல்கள் அவதானிப்புக்கள் ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட ஆதாரங்கள், தகவல்கள் என்பனவற்றின் துணை கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. விவரக் கொத்து (பின்னிணைப்பு, பக் 42-43) ஒன்று தயாரிக்கப்பட்டுத் தோட்டங்களில் வாழும் மக்களிடமிருந்து விவரங்கள் திரட்டப்பட்டன. இவ்விவரங்களே இவ்வாய்வின் முதனிலை ஆதாரங்களாகக் கொள்ளப்பட்டன. முதனிலை ஆதாரங்கள் மூலம் விளக்க முடியாதவை துணை ஆதாரங்கள் மூலம் விளக்கப்பட்டுள்ளன; பிரசுரிக்கப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன துணை ஆதாரங்களாக விளங்கின.

இந் நூலில் op. cit, Ibid என்னும் சொற்கள் எடுத்தாளப்படாது, அதே கருத்துடைய மே. கு. நூல் (மேற் குறிப்பிட்ட நூல் என்பதன் சுருக்கம்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நூலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ள பல்வேறு நம்பிக்கைக ளும், சடங்கு முறைகளும் இடத்துக்கிடம் வேறுபடுவதுடன், காலத் துக்குக் காலம் மாற்றங்களுக்கு உட்படுவனவுமாகும். அத்தோடு இந் நூலில் ஆராயப்பட்டுள்ள விடயங்கள் சுருக்கமான அறிமுகமே ஆகும். அவை மேலும் விரிவான முறையில் ஆராயத்தக்கன.

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் முதுநிலை விரிவுரையாளர் களாகக் கடமையாற்றும் திருவாளர் மு. சின்னத்தம்பி, கலாநிதி க. அரு ணாசலம் ஆகியோருக்கும் தற்பொழுது இந்தியாவில் வசிக்கும் திரு. வீரா பாலச்சந்திரன், திரு. சு. திருச்செந்தூரன் ஆகியோருக்கும் என் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். மலையக மக்களின் பண்பாட்டு ஆய்வு முயற்சியில் என்னை ஓர் ஆய்வாளனாகவும், இணைப்பாளனாகவும் பங்கு கொள்ளச் செய்தமைக்கு உதயம் நிறு வனத்தினருக்கும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கும் நான் என்றும் நன்றியுடையவனாவேன்.

மக்களிடம் கற்றவற்றை மீண்டும் அம் மக்களுக்கு வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

ந. வேல்முருகு.

புவியியல் துறை,
பேராதனைப் பல்கலைக் கழகம்,
பேராதனை.
*11 - 7 - 1993*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலையக மக்களின் சமய நம்பிக்கைகளும் சடங்கு முறைகளும்.

### அறிமுகம்

தென்னிந்தியாவிலிருந்து இலங்கைப் பெருந்தோட்டங்களுக்குக் குடிவந்தோர் நம்பிக்கைகளும் சடங்குகளும் கொண்ட இந்து மதத்தினராக இருந்ததுடன், இந்த நம்பிக்கைகளையும் சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் தொடர்ந்தும் பேணி வருபவர்களாக இருந்தனர். (1) வளர்ச்சியும் மாற்றங்களும் இச் சமூகத்தினருக்கு ஏற்பட்டதற்கேற்ப இவர்களது மத நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள் என்பவற்றிலும் தொடர்ச்சியின் வழிவந்த வளர்ச்சியும் மாற்றத்தின் வழிவந்த வளர்ச்சியும் ஏற்படலாயின. (2) நம்பிக்கைகள், சடங்குகள், விழாக்கள், கலைகள் யாவும் காலத்துக்குக் காலம் மாறுபடுவதுடன் அவை மக்களது செய்தொழில், சாதி, வயது, பால், மதஅறிவு, கல்வியறிவு, உலக அநுபவம், மன நிலை, உடனிலை, பொருளாதார நிலை, மக்கள் வாழும் சூழல், அவர்களின் பின்னிய செயல் விளைவு, உபயோகித்த பொருட்கள் என்பனவற்றிற்கேற்பப் பண்பாட்டுக்குரிய நிலத்தோற்றங்களை உருவாக்கவும் காரணமாகின. (3)

இலங்கை வாழ் இந்திய வம்சாவழியினரின் வாழ்க்கை முறையாக இந்துமதம் காணப்படுகின்றது. இவ்வாழ்க்கைமுறை வீட்டிலிருந்து சுடுகாடு வரையும் பிறப்பதற்கு முன்னரிலிருந்து இறப்பதற்குப் பின்னரும் வழிமுறை வழிமுறையாகக் கடைப்பிடிக்கப்படுகின்றது. இத்தகைய வாழ்க்கை முறையினைப் பெருந்தோட்டங்களில் தொடர்ந்தும் பின்பற்றுவதற்குத் தென்னிந்தியாவில் வாழ்ந்த வாழ்க்கைமுறை கங்காணிமார் மேற்கொண்ட ஆட்சேகரிப்பு முறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், இலங்கையில் இந்துமதத்துக்கிருந்த செல்வாக்கு, தோட்டங்களில் இந்துமதம் வளர்வதற்கேற்ற சூழல் இருந்தமை, தொழிலாளர், கங்காணிமார், தோட்ட உத்தியோகத்தர், வர்த்தகர்கள் ஆகியோரின் பங்களிப்புக்கள் என்பன காரணமாகின. தோட்டத் தொழிலாளர்களது நாளாந்த வாழ்வில் சமயம் பெற்றிருந்த முக்கியத்துவத்தினை உணர்ந்த பெரிய கங்காணிமாரும், கணக்கப்பிள்ளைகளும் தோட்ட நிர்வாகத்தினரும் வழிபாட்டு முறைகளை ஊக்குவித்தனர். பெரிய தோட்டங்கள் சில தென்னிந்தியக் கிராமங்களின் சமூக வாழ்க்கைமுறைகளையும் மதப் பண்புகளையும் சாதியமைப்பினையும் அவ்வாறே பேணிப் பாதுகாத்தன. மக்களது அன்றாட வாழ்விலும் இன்பதுன்பங்களிலும் சமயம் முக்கியத்துவம் பெற்றதை அறிந்திருந்த கங்காணிமார் தோட்டங்களில் வழிபாட்டுத்தலங்களை அமைப்பதற்கெனத் தென்னிந்தியக் கிராமங்களிலிருந்து சிற்பக்கலை வல்லுனர்களையும், வழிபாட்டு ஆராதனைகளை மேற்கொள்வதற்கென வீர சைவப் பண்டாரங்களையும் இலங்கைக்கு அழைத்து வந்ததோடு மந்திரம், மாயம் தெரிந்த மந்திரவாதிகளையும் அழைத்து வந்தனர்.

வரலாற்றுக் காரணிகளுடன் தோட்டங்களின் அமைவு, அமைப்பு என்பனவும் இயற்கையுடன் தொடர்புடைய காரணங்களும், மக்களின் சமூக, பொருளாதார நிலைகளும் சமய வளர்ச்சிக்குக் காரணமாகின. பெருந்தோட்டங்கள் வளர்ச்சியடைந்த எல்லாப் பிரதேசங்களிலும் தோட்டங்கள் ஏனைய சமூகங்களிலிருந்தும் பொதுப் பொருளாதார அமைப்பிலிருந்தும் வேறாக்கப்பட்டு அத் தோட்டங்களுக்கெனத் தனியான வழிபாட்டுத் தலங்கள், கடைகள், மது அருந்துமிடங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள் முதலானவை நிறுவப்பட்டு, தொழிலாளர்கள் வெளித்தொடர்புகளிலிருந்து இயலுமான வரை துண்டிக்கப்பட்டனர் (4)

நீண்டதூர ஆபத்தான பயணம், கள்வர் பயம், காடுகளுக்கூடாகப் பயணம் செய்யும்போதும், பெருந்தோட்டங்களை அமைப்பதற்காகக் காடுகளை அழிக்கும்போதும், ஏற்பட்ட விபத்துக்கள், கொடிய மிருகங்கள், ஜந்துக்கள் என்பவற்றிலிருந்து பாதுகாப்பு, வெளியுலகத் தொடர்புகள் குறைவான தனிமையான வாழ்க்கை, மழை, வரட்சி, குளிர், கடுங்காற்று, வெள்ளம், தொற்றுநோய் போன்றவற்றிலிருந்து பாதுகாப்புப் போன்ற தேவைகளின் நிமித்தமும் மத நம்பிக்கை வளரலாயிற்று. வழிப்பாட்டுத் தலங்கள் ஓய்வு நேரப் பொழுதுபோக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் இடங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாகவும் பல்வேறு கலைகள், இலக்கியம், விளையாட்டுக்கள் என்பன வளர்க்கப்படும் இடங்களாகவும் விளங்கியதால் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்தின. கடின உழைப்பின் பின்னர் உடலுக்கும் உள்ளத்துக்கும் ஆறுதலளிக்கும் இடங்களாகவும் சிலவேளைகளில் நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுமிடங்களாகவும், மக்களை நன்னெறிப்படுத்துமிடங்களாகவும் பண்பாட்டையும் சமூக அமைப்பினையும் தொடர்ந்து பேணும் இடங்களாகவும் வழிபாட்டுத்தலங்கள் விளங்கின.

## பண்பாட்டுக்குரிய நிலத்தோற்றம் உருவாகியமை

தென்னிந்தியாவிலிருந்து பெருமளவு இந்துக்கள் இலங்கைக்குக் குடிவரத் தொடங்கிய பின்னர் இலங்கையின் பண்பாட்டுக்குரிய நிலத் தோற்றத்திலும் பல மாற்றங்கள் ஏற்படலாயின. இந்துக்கள் வந்திறங்கிய துறைகள், தங்கிய இடங்கள், பிரயாணம் செய்யும் போது ஓய்வெடுத்த இடங்கள் நிரந்தரமாகத் தங்கிக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்ட பகுதிகள் ஆகியவற்றில் வழிபாட்டிடங்களும் தங்குமிடங்களும் நிறுவப்பட்டதுடன் கிடைத்த வருவாய்க்கேற்ப நிறுவன நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. பெருந்தோட்டங்களில் வேலை புரிந்த தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து வந்து சென்ற பாதைகளில் முக்கியமாக சந்திக் குடியிருப்புக்களையடுத்தும், பிரதான வீதிகளையடுத்தும் தொழிலாளர்களும் வர்த்தகர்களும் கூடும் இடங்களிலும் பல இந்துக்கோவில்கள் நிறுவப்பட்டன.

சென்ற நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலிருந்து பெருந்தோட்டங்களில் பல கோவில்கள் ஸ்தாபிக்கப்பட்டன. தேயிலை, றப்பர் ஆகிய பயிர்கள் பயிரிடத் தொடங்கியதன் பின்னர் நிரந்தரத் தொழிலாளர்கள் தேவைப்பட்டமையால் தோட்ட நிர்வாகத்தினர் தொழிலாளர்களது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியவர்களாயினர். வழிபாடும் ஏனைய சமய நடவடிக்கைகளும் தொழிலாளர்களாலும் கங்காணிமாரினாலும் முக்கியமானவையாகக் கருதப்பட்டமையால் தோட்டங்களில் வழங்கப்பட்ட சமூக வசதிகளில் மத நடவடிக்கைகள் முதன்மையான இடத்தை வகித்தன. மத சுதந்திரத்தால் தோட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகள் பாதிக்கப்படவில்லை என்பதனையும் இவ்வசதிகளினால் வெளியுலகத் தொடர்புகள் குறைந்து தொழிலாளர்கள் நிரந்தரமாகத் தோட்டங்களிலேயே வாழ விரும்புவார்கள் என்பதனையும் தோட்டச் சொந்தக்காரர்களும் நிர்வாகத்தினரும் நன்கறிந்திருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிக முயற்சிகள் மேற்கொள்ளப்படாது தோட்டங்களில் வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனால் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்திய வம்சாவழியினர் வாழ்ந்த பெருந்தோட்டங்கள் யாவற்றிலும் இந்து வழிபாட்டிடங்கள் தோன்றலாயின. இவை மதச் சிந்தனைக்கும் மதம் பரப்புதலுக்கும் வளர்ச்சிக்கும் துணைநின்றதுடன் நிர்வாகத்தினருக்கும் ஆட்சியாளர்களுக்கும் அனுசரணையாகச் செயற்பட்டு ஆட்சிக் கருவியாக மாறின. 1917 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட இந்திய அரசாங்க அறிக்கையில் குறிப்பிட்டது போன்று, "பெரும்பாலான தோட்டங்களில் கோவில்கள் காணப்பட்டன. சில மிகச் சிறந்த கட்டடங்களைக் கொண்டவை. எடுத்துக் காட்டாக, உறன்வெல்லயில் உள்ள சிவாலயம் தோட்ட நிர்வாகத்தினர், தோட்டத்துரை, கங்காணிமார், தொழிலாளர் ஆகியோர் வழங்கிய பல்லாயிரக்கணக்கான ரூபா செலவில் கட்டப்பட்டது." (5)

பெருந்தோட்டங்களில் நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்பட்ட புலனாகும் வழிபாடு, நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கப்படாமல் புலனாகா வழிபாடு என இருவகை வழிபாடுகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. (6) கட்டடங்கள் அமைக்கப்பட்டு கோவில்கள் அல்லது வழிபாட்டு இடங்கள் என்று கூறக்கூடியவற்றிலும் கட்டடங்கள் இல்லாத வழிபாட்டு இடங்களாக உள்ளவற்றிலும் குடும்பத் தெய்வங்கள், சிறு தெய்வங்கள், பெருந்தெய்வங்கள், தேவதைகள், உயிரினங்கள் ஆகியவை வழிபாடு செய்யப்படுகின்றன.

குடும்பத் தெய்வங்கள்

பெருந்தோட்டங்களில் வசிக்கும் இந்திய வம்சாவழியினர் பல குடும்பத்தெய்வங்களைத் தமது வீடுகளில் வழிபடுவது வழக்கம். இத்தெய்வங்களின் பெயர்கள், குணாம்சங்கள் என்பவற்றைக் குடும்பங்களின் தலைவனும் தலைவியுமே அறிந்திருப்பர். இத்தெய்வங்கள் அவர்களது வீடுகளில் இருந்து தம்மைக் காத்து வருவதாகவும் இவற்றின் பெயர்களை வெளியிடுவதன் மூலம் எதிரிகள் அல்லது விஷமிகள் அத்தெய்வங்களின் சக்தியை மந்திர சக்தி மூலம் கட்டுப்படுத்தித் தமக்கு பில்லி சூனியம் செய்து துன்பம் விளைவிக்க ஏதுவாக அமையும் என்ற நம்பிக்கையினாலும் இலகுவில் பெயர்களை வெளியிடமாட்டார்கள். (7)

இவ்வீட்டுத் தெய்வங்களுடன் பெரும்பாலும் ஒவ்வொரு வீட்டிலும் நொண்டி அப்பாச்சி, ஐயனார், சங்கிலிக் கறுப்பன், மாடசாமி, மதுரைவீரன் போன்ற காவல் தெய்வங்களுள் ஒன்றும் வணங்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறு தெய்வங்கள்

சிறு நெறியில் அடங்கும் சிறு தெய்வங்களின் வழிபாடு தோட்டங்களில் மிகவும் பிரபல்யமடைந்துள்ளது, (8) தென்னிந்தியாவிலுள்ள ஊர்த்தெய்வங்கள் பல அதே பெயர்களில் அல்லது வேறு பெயர்களில் தோட்டங்களில் வணங்கப்படுகின்றன. இச்சிறு தெய்வங்கள் தொழிலாளர்களது நாளாந்த வாழ்வில் முக்கிய இடத்தை வகிப்பதோடு மாத்திரமல்லாமல இந்துக்களுக்கு "ஊர்த்தெய்வம் உயிருள்ளதாகவும் உண்டு, குடித்து, உறங்குவதுடன் வாழ்க்கையை ஆசிர்வதிக்கக்கூடிய அல்லது சபிக்கக்கூடிய சக்தியுடையதாகவும் உள்ளது"(9) "இக்கிராம தேவதைகள் உலகங்கள் யாவற்றையும் உள்ளடக்கிய உன்னத சக்திகள் கொண்டிராது குறிப்பிட்ட கிராமங்களுக்கு மாத்திரம் அருள்பாலிக்கும் தெய்வங்களாக விளங்குகின்றன" (10) பத்தினியம்மன், காளி, ஏழு கன்னிகைகள் அல்லது ஏழு கன்னிமார், மதுரைவீரன், மாடசாமி, முனியாண்டி அல்லது முனி, ரோதை முனி, கருப்பன் சாமி அல்லது கறுப்புச் சாமி, வேட்டைக் கறுப்பன் அல்லது வேட்டைக் கறுப்பு, செண்டாக்கட்டி, கவ்வாத்துச்சாமி, மலைசாமி, மின்னடையான், வைரவர், இடும்பன், வனத்துச் சின்னப்பர் ஆகிய சிறு தெய்வங்கள் அல்லது குலதெய்வங்கள் தோட்டங்களில் வாழும் மக்களது இன்பதுன்பங்களில் பங்குபற்றுகின்றன (11) பெரும்பாலும் இத்தெய்வங்களுக்குச் சிலைகள் அமைக்கப்படாது முக்கோண வடிவான கல், வேல், சூலம் என்பன புனிதமான மரத்தடியில் நிறுவப்பட்டு வணங்கப்படுவது வழக்கமாகும். பெரிய அழகிய மரங்களான செண்பக மரம், சவுக்கு மரம், ஆலமரம், அரச மரம், பலா மரம், வேம்பு, அத்தி, கித்துல் என்பனவற்றின்கீழ் கட்டடங்கள் அமைக்கப்படாது மண் அல்லது சீமெந்து மேடையில் இத்தெய்வங்களை வழிபடுவது வழக்கம். ஒரு சில தோட்டங்களில் இத்தெய்வங்களுக்குத் தகரக் கூரையுடனான மிகச்சிறிய கோவில்கள் அமைக்கப்படுவதுமுண்டு. சில தோட்டங்களில் மிக அழகிய சூழலில் அமைதியான, ஒதுக்குப்புறமான இடங்களில் இத்தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. அழகிய கற்பார்கள், வெளியரும்புப் பாறைகள், சிறு குன்றுகள். அருவிகள், நீர்வீழ்ச்சிகள் முதலியன உள்ள இடங்களுக்கு அருகேயுள்ள பெரிய மரங்கள் பெரும்பாலும் வழிபாட்டு இடங்களாகியுள்ளன. இவை தொழிலாளர்கள் குடியிருக்கும் இருப்பிடங்களுக்கு அருகிலோ அன்றி, தொலைவிலோ இருக்கலாம். சமூக சமய வினைமுறையாக (வினை மரபு) பொங்கல், படையல் என்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை மேற்கொள்வதற்கும், பலியிடுவதற்கும் ஏ ற் ற இடங்களாக இவை இருக்கவேண்டுமாதலால் பெரும்பாலும் அருகில் நீர் கிடைக்கக் கூடிய இடங்களே வழிபாட்டிடங்களாகி உள்ளன. வணங்குமிடத்தை யும் தெய்வத்தையும் காணிக்கைப் பொருட்களையும் கழுவிச் சுத்தம் செய்வதற்கும் நீர் தேவைப்படும். வழிபடுவோரும் படைப்போரும் தெய்வமும் உண்டு, குடித்து, புகைத்து, க தை த் து, ஒய்வெடுத்து, உறங்கக்கூடிய இடங்களாகவும் வழிபாட்டிடங்கள் காணப்படுகின்றன.

பத்தினியம்மன், காளி, ஏழு கன்னிகைகள் தவிர்ந்த ஏனைய சிறு தெய்வங்கள் யாவும் ஆண் தெய்வங்களாகும். இத்தெய்வங்கள் சாதி அடிப்படையிலும் செய்தொழில் அடிப்படையிலும் வணங்கப் படுகின்றன. பெரும்பாலான இச்சிறு தெய்வங்கள் சாதியடிப்படை யில் மேற்கொள்ளப்படும் செய்தொழில்களையும் தொழிலாளரையும் காக்கும் காவல் தெய்வங்களாக விளங்குகின்றன. இதனால் இவற்றில் சில குறிப்பிட்ட சாதியினரால் மாத்திரம் வணங்கப்படும் குலதெய் வங்களாக அன்றி சாதித்தெய்வங்களாகவும் இனங்காணப்படுகின்றன. தெய்வ அந்தஸ்துப் பெற்றவர்கள் சிலர் உண்மையில் உயிர் வாழ்ந்து இறந்தவர்களாகவும் காணப்படுகின்றனர். மின்னடையான், வைரவர் போன்ற சிறு தெய்வங்கள் சாதி வேறுபாடின்றி வணங்கப்படுகின்றன, சில தெய்வங்கள் தோட்டம் முழுவதையும் காக்கும் தெய்வங்களாக இருப்பதனால் சாதி வேறுபாடின்றி வணங்கப்படுகின்றன.

(1) கெட்ட தேவதைகள், பிசாசுகள் என்பன தோட்டங்களுக்குள் வராது காத்தல்,
(2) நோய்கள் ஏற்படாது காப்பாற்றுதல்,
(3) வெள்ளம், வரட்சி என்பன ஏற்படாது தடுத்தல்,
(4) கெட்டவர்களும் கள்வர்களும் வராது கண்காணித்தல்,
(5) உயிர்களையும் உடைமைகளையும் காத்தல்,
(6) விபத்துக்கள், அங்கவீனங்கள் ஏற்படாது பாதுகாத்தல்,
(7) பயணங்களின்போது, முக்கியமாக இ ர வு நே ர ப் பயணங்களின் போது துணைநிற்றல்

போன்ற தொழில்களையும் கடமைகளையும் கா வ ல் தெய்வங்கள் ஆற்றுவார்களெனத் தோட்டங்களில் வாழும் இந்துக்கள் நம்புகின்றனர். (12)

நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கும் நோய்வாய்ப்பட்டோரைச் சுகப்படுத்தவும் பத்தினியம்மன் அல்லது பத்தினித் தெய்வம், காளி, ஏழு கன்னிமார் ஆகிய தெ ய் வ ங் க ள் வணங்கப்படுகின்றன. மாரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யம்மனின் மறு அவதாரமாகவும் மாரியின் குணாம்சங்களை உடைய தெய்வங்களாகவும் இத்தெய்வங்கள் கருதப்படுகின்றன. இந்துத் தெய்வமாக இருந்தபோதும் பத்தினி (கண்ணகி) வழிபாடு சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் பெற்றுள்ளது. (13) இத்தெய்வம் உயர்நிலப் பிரதேசத்திலும் இடைநிலப் பிரதேசத்திலும் வழிபடப் படுவதனையும் தாழ்நிலப் பிரதேசத்தில் அதிக முக்கியத்துவமின்றி யிருப்பதனையும் அவதானிக்கலாம். (அட்டவணை : 1)

மருதையான், மதுரைவீரசுவாமி, மருதை வீரன் என்று அழைக்கப்படும் மதுரைவீரன் நாட்டார் நிலை வீரனாகக் கருதப்பட்டுத் தெய்வ அந்தஸ்துப் பெற்றிருப்பதனை அவதானிக்கலாம். (14) மதுரைவீரன் கதையில் சில நிகழ்ச்சிகள் திருமலை நாயக்கர் காலத்தில் நடைபெற்றவை. மதுரைவீரன் தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினன். மலைகளில் மாடு மேய்ப்பதும் செத்த மாட்டை அறுப்பதும் தோல் பதனிடுவதும் செருப்புத் தைப் பதும் குதிரைச் சேணம் தைப்பதும் அவர்களது வேலை. (தற்காலத்தைப் போலக் கழிவிடங்களைச் சுத்தம் செய்யும் வேலை அவர்களுக்கிருக்கவில்லை) இவர்கள் நாயக்கர் ஆட்சிக்காலத்தில் அவர்களோடு வந்து குடியேறியவர்கள். நாயக்கர் பாளையங்களில் தோற் பொருட்கள் செய்து ராணுவத்திற்கும் மக்களுக்கும் விற்பனை செய்து வந்தார்கள். திருச்சி மாவட்டத்தில் பொம்மணன் என்ற பாளையக்காரனிடம் வேலை செய்துவந்த மதுரைவீரனைப் பொம் மணன் மகள் பொம்மி காதலிக்கிறாள். சாதி வேறுபாடு காரணமாக இருவரும் மணம் செய்து கொள்ள முடியாது எனவே திருச்சிக்கு உடன் போக்காக வந்து விடுகிறார்கள். வரும் வழியில் பொம்மணன் படை யோடு வந்து போராடுகிறான் படை அழிந்து பொம்மணன் இறந்து போகிறான். மதுரைவீரன் திருச்சியில் ராணுவத்தில் சேர்ந்து பல பகைவர்களை முறியடித்து வாழ்ந்து வரும்பொழுது திருச்சி நாயக்க னது மகளைக் காதலித்து அவளை அடிக்கடி சந்திக்கிறான். இது நாயக்கனுக்குத் தெரியவந்து அவனை நகரைவிட்டு ஓட்டிவிடுகிறான். அவனது வீரத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் திருமலை நாயக்கன் விரும்பியதால் அவனை மதுரைக்கு அழைத்துக்கொள்கிறான். பொம்மியோடு மதுரை சென்ற மதுரைவீரனைத் திருமலை நாயக்கன் ஒரு படைப்பிரிவின் தலைவனாக நியமிக்கின்றான். கள்ளழகர் கோவிலைச் சேர்ந்த கள்ளர்கள் மதுரை இராச்சியத்தில் பல இடங் களில் கொள்ளையடித்து வந்தார்கள். திருமலை நாயக்கன் இக் கள்ளர்களை ஒடுக்க மதுரைவீரனை அனுப்பினான். மதுரைவீரன் கள்ளர்களோடு போரிட்டு அவர்களை அடக்கினான். அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை : 1**

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தோட்டங்களில் இருந்த கோவில்களும் வழிபடப்பட்ட சிறு தெய்வங்களும், குலதெய்வங்களும் (விகிதத்தில்)

| | உயர் நிலப் பிரதேசம் n = 6 | இடைநிலப் பிரதேசம் n = 6 | தாழ் நிலப் பிரதேசம் n = 6 | மூன்று பிரதேசங்களிலும் n = 18 |
|---|---|---|---|---|
| 1. கோவில்கள் | | | | |
| மாரியம்மன் | 6 : 5 | 6 : 23 | 6 : 9 | 18 : 37 |
| சுப்பிரமணியர்/கதிரேசன் | 6 : 10 | 6 : 2 | 6 : 3 | 18 : 15 |
| விநாயகர் | 6 : 2 | 6 : 4 | 6 : 0 | 18 : 6 |
| ராமர்/பெருமாள் | 6 : 2 | 6 : 2 | 6 : 1 | 18 : 5 |
| 2. சிறுதெய்வங்கள் குலதெய்வங்கள் | | | | |
| பத்தினியம்மன்/பத்தினித்தெய்வம் | 6 : 2 | 6 : 2 | 6 : 0 | 18 : 4 |
| மதுரைவீரன்/மருதையன்/மருதைவீரன் | 6 : 4 | 6 : 2 | 6 : 2 | 18 : 8 |
| மாடசாமி | 6 : 3 | 6 : 5 | 6 : 2 | 18 : 10 |
| முனியாண்டி/முனி | 6 . 5 | 6 : 8 | 6 : 4 | 18 : 17 |
| ரோதைமுனி | 6 : 6 | 6 : 4 | 6 : 1 | 18 : 11 |
| கருப்புச்சாமி/கருப்பன்சாமி | 6 : 2 | 6 : 0 | 6 : 1 | 18 : 3 |
| கவ்வாத்துச்சாமி | 6 : 1 | 6 : 1 | 6 : 0 | 18 : 2 |
| செண்டாக்கட்டி | 6 : 3 | 6 : 1 | 6 : 0 | 18 : 4 |
| வனத்துச் சின்னப்பர் | 6 : 0 | 6 : 2 | 6 : 0 | 18 : 2 |

n - ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை.
ஆதாரம் : வெளிக்கள ஆய்வு, 1981.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோல்வியடைந்துவிட்டபோதிலும் மதுரைவீரன்மீது பகைமை உணர்வோடுதான் இருந்தனர். நாட்டின் மிகப்பெரும் சாதியினரான கள்ளர்கள் அவனுடைய பகைவராயினர். இச்சமயம் வேறொரு நிகழ்ச்சியும் நடந்தது. திருமலை நாயக்கனின் காதல் கிழத்தி ஒருத்தியை மதுரைவீரன் அடிக்கடி சந்தித்துவந்தான். அதனை அறிந்த திருமலை நாயக்கன் மதுரைவீரன் தனது காதற் கிழத்தியோடு பழகுவதாக எண்ணி வெகுண்டு அவனை மாறுகால், மாறுகை வாங்க உத்தரவிட்டான். அவனது ஒரு கையும் காலும் வெட்டப்பட்டன. அவன் இறந்தபின் பொம்மியும் அரசனது காதற் கிழத்தியான வெள்ளையம்மாளும் உடன்கட்டை ஏறினர். மதுரைவீரனின் இறுதிக் காலத்தில் அவனால் அடக்கப்பட்ட கள்ளர்களின் தலைவர்கள் திருமலை நாயக்கனது நண்பர்களாகிவிட்டனர், இவர்களுடைய தூண்டுதலினாலேயே மதுரைவீரன் கொல்லப்பட்டான்.(15) நா. வானமாமலை கூறியது போன்று இவை தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினருக்கும் உயர் வர்க்கத்தினருக்கும் ஏற்பட்ட முரண்பாடுகளும் போராட்டங்களும், உடைமை வர்க்கத்தினருக்கும் உழைக்கும் வர்க்கத்தினருக்கும் இடையே தோன்றிய முரண்பாடுகளும் போராட்டங்களுமே. தாழ்த்தப்பட்டவர்கள் தமது வலிமை, திறமை, ஆற்றல் முதலியவற்றால் மக்களிடையே செல்வாக்குப் பெற்றால் அவர்களால் தம்து பதவிக்கும் செல்வாக்குக்கும் ஆபத்து வந்துவிடக் கூடாதென்று எண்ணி அவர்களை ஒழித்துவிடுவதற்குப் பல முயற்சிகள் நடந்துள்ளன. மதுரைவீரனை இதற்கு ஓர் எடுத்துக்காட்டாகக் கூறலாம். (16)

உயர் வர்க்கத்தினரால் ஒழித்துக்கட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் மதுரைவீரன் மீனாட்சியம்மை சந்நிதியில் உயிரைப் போக்கிக்கொண்டு தெய்வ அந்தஸ்தினைப் பெறுவதுடன் நாட்டார் பாடல்களிலும் இலக்கியத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றுக்கொண்டான். (17) "மதுரைவீரனை வழிபட்டவர்களுக்கும் மதுரைவீர அம்மானையைப் படித்தவர்களுக்கும் கேட்டவர்களுக்கும் சுக்கிரவாரந்தோறும் பூசை செய்பவர்களுக்கும் கலியாணங்கூடி வரும், உத்தியோகம் வரும் வியாதியால் மெலிகின்றவர்களுக்கு வியாதி நீங்கிவிடும், மனோ கவலை நீங்கும், சகல பாக்கியமும் சந்தான சம்பத்தும் அஷ்டயீஸ்வரியமும் தன கனகவஸ்துவும் தீர்க்காயுசும் புத்திர சம்பத்தும், மாடுகள், கன்றுகள் தழைத்துப் பயிர்களெல்லாம் நீகூறிமையோங்கி எப்பொழுதும் அழிவில்லாப் பெருமையுண்டாகும் ......" என நம்பப்படுகிறது. (18)

உயர்நிலப் பிரதேசத்தில் மதுரைவீரன் வழிபாடு முதலிடத்தைப் பெற்றிருந்தது. இடைநிலப் பிரதேசத்திலும் தாழ்நிலப் பிரதேசத்திலும் ஓரளவு செல்வாக்குப் பெற்றிருந்தது (அட்டவணை:1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்டிமாடன், சங்கிலிமாடன், நொண்டிமாடன் என அழைக்கப் படும் மாடசாமி தோட்டத்துள் பேய், பிசாசுகள் நுழையாது சுடு காட்டினைக் காவல் புரியும் தெய்வமாகக் கருதப்படுகின்றது. மாட சாமியின் சகோதரிகளாக ஏழு கன்னிமார்களையும் கருதுபவர்களும் உள்ளனர். ''பச்சைப் பிணத்தையெல்லாம் பால் வடியத் தின்னும்'' மாடசாமியின் சேட்டைகள் பெரும்பாலும மாலையில் அல்லது அதி காலை வேளைகளில் இருக்குமென மக்கள் அஞ்சுவர். (19) மாரியா யியின் மகன் என நம்பப்படும் முனியாண்டி கெட்ட ஆவியாகக் கருதப் பட்டபோதும் இதனை வழிபட்டு இரவுப் பயணங்களை ஆபத்தின்றி மேற்கொள்ளமுடியுமென மக்கள் நம்புகின்றனர். (20)

மாடசாமி வழிபாடு இடைநிலப் பிரதேசத்தில் அதி முக்கியத் துவம் பெற்றிருந்தது. உயர்நிலப் பிரதேசத்திலும் தாழ்நிலப் பிர தேசத்திலும் ஓரளவு முக்கியத்துவம் பெற்றிருந்தது. (அட்டவணை:1)

பல்வேறு பெயர்களுடைய முனிகளை மக்கள் வழிபடுகின்றார் கள். (21) கொம்புமுனி, கழுகுமுனி, ரோதைமுனி என்பவை முக்கிய மானவையாகக் கருதப்படுகின்றன. இவற்றுள் ரோதைமுனி அல்லது பாதாள ரோதைமுனி தோட்டங்களில் மிகவும் பிரபல்யம் பெற் றிருப்பதுடன் பயபக்தியுடன் வணங்கப்படுகிறது. இது தொழிற் சாலைகளில் இயந்திரங்களுடன் வேலை செய்பவர்களைக் காப்பாற் றும் தெய்வமாகும். இயந்திரங்களில் பொருத்தப்பட்டுள்ள சக்கரங் கள் ''ரோதை'' என அழைக்கப்படுகின்றன. இச்சக்கரங்களுள் அகப் பட்டு விபத்து ஏற்படாது காப்பதற்காகப் பெரும்பான்மையான தொழிற்சாலைகளின் அருகிலும் ரோதை முனிக்கு 'சூலம்' அமைத்து வழிபடுவது வழக்கம். இன, மொழி, சாதி வேறுபாடு இன்றி 'ரோதை முனி'' வணங்கப்படுவது வழக்கமாகும். 'ரோதைமுனி' போன்று வியாதிகளிலிருந்தும் விபத்துக்களிலிருந்தும் காக்கும் தெய்வமாகச் செண்டாக்கட்டித் தெய்வம் விளங்குகிறது.

உயர்நிலப் பிரதேசத்தில் பெரும்பாலும் எல்லாத் தோட்டங் களிலும் ரோதைமுனி வழிபாடு முக்கியம் பெறுகின்றது. இடைநிலப் பிரதேசத்தில் இதன் செல்வாக்கு ஓரளவிலும் தாழ்நிலப் பிரதேசத் தில் மிகச் சிறுஅளவிலுமே இருந்தது.

கருப்பன்சாமி, கறுப்புச்சாமி, வேட்டைக் கறுப்பன் அல்லது வேட்டைச் கறுப்பு என்றழைக்கப்படும் தெய்வம் பெரும்பாலும் மிருகங்கள் வாழும் காடுகளை அடுத்துள்ள தோட்டங்களில் வணங்கப் படுகின்றது. காடுகளில் உள்ள மிருகங்களால் பாதிப்பு ஏற்படக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடாது என்பதற்காகவும் வேட்டையில் ஈடுபடுவோருக்கு ஆபத்துக் கள் ஏற்படாது வேட்டை மிருகங்கள் பறவைகள் கிடைக்கவேண்டு மென்பதற்காகவும் இத்தெய்வம் வழிபடப்படுகிறது. (22) இது உயர் நிலப் பிரதேசத்திலும் தாழ்நிலப் பிரதேசத்திலும் ஓரளவு முக்கியத் துவம் பெற்றிருக்க இடைநிலப் பிரதேசத்தில் முக்கியத்துவம் பெறா திருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

விளைச்சல் அதிகரித்து தமது வாழ்வு சிறக்க வேண்டுமென வேண்டியும் பல்வேறு தொழில்களைச் செய்யும்போது ஆபத்து ஏற் படாது இருக்கவும் கவ்வாத்துச் சாமியையும் மலைச்சாமியையும் வனத்துச் சின்னப்பரையும் வழிபடுவதுடன் படையலும் படைக்கப் படுவதுண்டு. (23) ஒரே தொழில் செய்யும் ஆண்களும் பெண்களும் இவ்வழிபாடுகளில் கலந்துகொள்வர்.

சிறு தெய்வங்களை வழிபடும் முறைகளில் அதிக வேறுபாடு கள் கிடையாது. வழிபடுபவர்களது வசதிக்கேற்பவும் தொகைக்கேற் பவும் நேர்த்திக் கடனுக்கேற்பவும் வழிபாட்டு முறைகள் வேறுபடும். பெரும்பாலும் பூசை செய்யும் உரிமை அவ்வத் தெய்வங்களை ஆதரித்துவரும் குலக்குழுவிற்கு உரியதாகும். திங்கள், செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும் விசேட நாட்களிலும் வழிபாடு மேற் கொள்ளப்படுவதுண்டு. பொங்கல், தீபாவளி, நாட்களிலும் நேர்த்திக் கடன்களை ஈடேற்ற வேண்டிய நாட்களிலும் பூசைகள் நடாத்தப் படுகின்றன. நேர்த்திக்கடனை ஈடேற்றுவதற்கு சூலம் முதலானவை செய்து கொடுக்கப்படுவதுண்டு. தெய்வங்களுக்குப் பல்வேறு பொருட் கள் படைக்கப்படுகின்றன. தேங்காய், பாக்கு வெற்றிலை, வாழைப் பழம், கற்பூரம், மதுபானங்கள் முதலியனவும் சில தெய்வங்களுக்குச் சுருட்டும் படைப்பர். பூசகர் தன் வாயினை ஒரு சிறு துணியால் கட்டிக்கொண்டு படைப்பார். சிலவேளைகளில் சில தெய்வங்களுக்கு சேவல், ஆடு என்பன பலியிடப்படுவதுமுண்டு. கிடாய் ஆடு பலி யிடப்படும்போது சில சடங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன. மாடசாமி, வேட்டைக்கறுப்பன் போன்ற தெய்வங்களுக்கு மிருகங்க ளின் ஈரல் படைக்கப்படும். வேட்டையாடிக் கொன்ற மிருகத்தின் ஈரலை நெருப்பில் சுட்டு வேட்டைக்கறுப்பனுக்குப் படைத்தால் வேட்டையில் மேலும் மிருகங்களைக் கொல்லலாம் என்ற ஐதீக நம்பிக்கை நிலவுகின்றது. சில தெய்வங்களுக்குப் படைத்த படையல் பொருட்கள் அனைத்தும் வீட்டுக்கு எடுத்துச்செல்லப்படாது குழி வெட்டிப் புதைக்கப்படும். கழுகுமுனிக்குப் படைத்த பொருட்களை ஆண்களும் பூப்பெய்தாத சிறு பெண் பிள்ளைகளும் சாப்பிடலாம் என்ற நம்பிக்கையுள்ளது. மதுரைவீரனுக்குப் படைத்தவற்றை யாவரும் சாப்பிடலாம். (24)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உயிரின வழிபாடு

உயிரின வழிபாட்டில் சில குறிப்பீட்ட மிருகங்கள், பறவைகள், ஊர்வன, மரங்கள் என்பன முக்கியத்துவம் பெறுகின்றன. இவற்றுள் சிறப்பாக நாகபாம்பு மிகமுக்கிய இடத்தைப் பெறுகிறது. நாகபாம்பு ஊறுவிளைவிக்காதிருக்க நாகதம்பிரான் வழிபாடு மேற்கொள்ளப் படுவதுடன் நாகபாம்பினைப் பார்த்த இடத்தில் அல்லது நாகம் வசிக்கும் புற்றின் அருகில் கற்பூர தீப ஆராதனை மேற்கொள்ளப் படுவதுண்டு. (25)

## தென்புலத்தார் வழிபாடு

தோட்டப்பகுதிகளில் வாழ்ந்த சித்தர்களை அப்பகுதிகளில் வாழும் மக்கள் வழிபடும் வழக்கமும் காணப்படுகின்றது. 'எதேச்சை யாக வாழ்ந்துவந்த இவர்கள் பொதுவான சமூக வாழ்க்கையிலிருந்து விலகி இருந்தமையால் ஏட்டிலும் இலக்கியத்திலும் அதிக இடம் பெறாமற் போயினர், (26) நவநாத சித்தர், நாகநாத சித்தர், பரமகுரு சுவாமிகள் போன்றோருக்கு முறையே நாவலப்பிட்டிக்கு அண்மையிலுள்ள குயீன்ஸ்பரி தோட்டத்திலும் கற்றனுக்கு அருகிலுள்ள குயில்வத்தையிலும் மாத்தளைக்கு அருகிலுள்ள மந்தண்டா வளையிலும் சமாதிகள் அமைக்கப்பட்டு வழிபாடு நடாத்தப்படு கின்றது. (27) தைப்பொங்கல் தினத்தில் நாகநாதருக்கும் பங்குனி யில் நவநாதருக்கும் விழாக்கள் எடுக்கப்படுகின்றன, (28)

மகாத்மா காந்திக்கும் ஜவகர்லால் நேருவுக்கும் 'தெய்வ' அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளதை சில தோட்டங்களில் அவதானிக்க லாம். தோட்டக் கோவில்களில் மகாத்மா காந்திக்குச் சிலைகள் அமைக்கப்பட்டு உள்ளதுடன் கோவில் சுவர்களில் காந்தி, நேரு முதலியோரின் உருவங்கள் வரையப்பட்டுள்ளன (29)

## பெருந் தெய்வ வழிபாடு

மாரியல்லாது காரியமில்லை என்னும் கூற்று பெருந்தோட்டங் களைப் பொறுத்தளவில் பல உண்மைகள் பொதிந்ததாகவுள்ளது. மாரியென்று மாரியம்மனும் மழையும் அழைக்கப்படுவது வழக்கம். மாரியம்மனினதும் மழையினதும் முக்கியத்துவத்தை இக்கூற்றுப் புலப்படுத்தும். சிவனின் அங்கமான சக்தியே மாரியம்மன் அவதாரம் என்னும் நம்பிக்கை இந்துக்களிடையே உள்ளது. மாரியம்மன் வைசூரி, அம்மைநோய், வாந்திபேதி, கொள்ளைநோய் முதலானவற்றை நீக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் தெய்வம் என்றும் மழையைப் பொழியச்செய்து வரட்சியையும் பஞ்சத்தையும் அகற்றும் தெய்வம் என்றும் கன்னிப்பெண்கள் வழிபட்டால் தாங்கள் விரும்பிய கணவரையடைய உதவி செய்யும் தெய்வம் என்றும் புத்திர பாக்கியம் அற்றவர்கள் வழிபட்டால் அவர்களுக்குக் குழந்தை பிறக்குமெனவும் செல்வத்தையும் சுகத்தையும் வழிபடுவோருக்கு வழங்கும் தெய்வமென்றும் தோட்டங்களில் வாழும் இந்துக்கள் நம்புகின்றனர். (30) கண், காது, தொண்டை ஆகிய அங்கங்களில் ஏற்படும் நோய்களுக்கு மாரியம்மனே காரணமென நம்புவதுடன் தொற்றுநோய்கள் பரவாது தடுப்பதற்காக ஏற்றப்படும் தடுப்பூசிகளிலிருந்து சுகம் வரவேண்டுமெனவும் மாரியாயியிக்குக் காணிக்கைகள் வழங்கப்படுவதுண்டு. (31)

'மாரியம்மா' கருணை பொழியும் தெய்வமாகவும் சில வேளைகளில் 'மிகவும் கொடிய தெய்வ' மாகவும் கருதப்படுவதுடன் இத்தெய்வம் தமிழ்நாட்டின் கிராமங்கள் யாவற்றிலும் வணங்கப்படுகிறது. தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் காளியம்மன், வீரகாளி அம்மன், பத்திரகாளி அம்மன், மகாகாளி, வீரமாகாளி, காளியாத்தாள் என்ற பெயர்களாலும் காளித்தாயை மக்கள் வழிபடுகின்றனர். (32)

மாரியம்மன் வழிபாடு மூன்று பிரதேசங்களிலும் பிரபல்யமாக உள்ளது. சிறப்பாக, இடைநிலப் பிரதேசத்தில் மாரியம்மன் கோவில்கள் பல உள்ளன. இடைநிலப் பிரதேசத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஆறு தோட்டங்களிலும் இருபத்திமூன்று மாரியம்மன் கோவில்கள் இருந்தன.

சங்க காலத்திலிருந்து முருகன் அல்லது வேலன் வழிபாடு தமிழ் மக்களிடையே பிரபல்யமடைந்துள்ளது. (33) இலங்கையிலும் இவ்வழிபாடு பிரபல்யமடைந்துள்ளது. (34) பௌத்த மக்களும் முருகனைக் 'கதிர்காமத்தெய்வம்' அல்லது ஸ்கந்த தெய்வம் என வழிபடுவது வழக்கம். இவ்வாறு தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் பிரபல்யமடைந்துள்ள முருக வழிபாடு தோட்டங்களிலும் பிரபல்யமுற்றுள்ளது. தோட்டங்களில் சுப்பிரமணியர் அல்லது கதிரேசன் என்னும் பெயரால் முருக வழிபாடு மேற்கொள்ளப்படுகின்றது. முருகன் யுத்தக் கடவுளாக விளங்கியதுடன் யாவராலும் விரும்பப்படும் மிகவும் பிரபல்யமான ஆண் தெய்வமாகவும் ஏனைய தெய்வங்களைவிட மிகவும் இலகுவாக அணுகக்கூடியவராகவும் கருதப்பட்டார். (35) சுப்பிரமணியர் அல்லது கதிரேசன் வழிபாடு உயர்நிலப் பிரதேசத்தில் பிரபல்யமாக இருந்தது. இங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட ஆறு தோட்டங்களில் பத்து சுப்பிரமணியர் ஆலயங்கள் அமைந்திருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணச் சடங்குகள் தவிர்ந்த ஏனைய சடங்குகள் யாவற்றினையும் தொடங்க முன்னர் வழிபடவேண்டிய தெய்வமாக விநாயகர் அல்லது கணேசர் விளங்கியதால் பெருந்தோட்டங்களில் பிள்ளையார் அல்லது விநாயகர் வழிபாடு முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆகம விதிப்படி அமைக்கப்படும் கோவில்களில் விநாயகருக்குத் தனியிடம் ஒதுக்கப்படுகின்றது. காட்டுத்தெய்வமாகவும் குளங்கள், நீர் நிலைகளைக் காக்கும் தெய்வமாகவும் விநாயகர் விளங்குவதுடன் கேட்பவற்றைக் கொடுக்கும் தெய்வமாகவும் கருதப்படுகின்றார்.

வைஷ்ணவம், பௌத்தம் என்பவற்றின் செல்வாக்கினால் பெருந்தோட்டங்களில் வாழும் இந்துக்கள் பெருமாள் அல்லது விஷ்ணுவுக்கும் கோவில்கள் அமைத்துள்ளனர். நீல நிறக் கடவுளான விஷ்ணு, கிருஷ்ணர், நாராயணர், ஹரி, கண்ணன், கோவிந்தன், இராமர் எனவும் அழைக்கப்படுகின்றார்.

சிறு தெய்வங்களுக்கும் பெருந்தெய்வங்களுக்கும் மேற்கொள்ளும் நேர்த்திக்கடன்களைத் தீர்க்கவென தீ மிதித்தல், காவடி ஆட்டம், கரகம் எடுத்தல் என்பன நடைபெறும்.

**காவல் தெய்வங்கள்**

கோவில்களில் காவல் தெய்வங்களாக மின்னடையானும் (முன்னுடையானும்) வைரவர், இடும்பன் ஆகிய தெய்வங்களும் வழிபடப்படுகின்றனர். மலையகத்தில் உள்ள முருகன் கோவில்களில் இடும்பன் முக்கியகாவல் தெய்வமாக வணங்கப்படுவது வழக்கம். (36)

**தோட்டக் கோவில்கள்**

தோட்டங்களில் அமைக்கப்பட்ட கோவில்களின் கட்டடக்கலை, அமைப்பு, பருமன், விக்கிரகங்கள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், பூசைகள், கிரியைகள், திருவிழாக்கள் என்பன தோட்டங்களின் அமைவிடம், தோட்டத்தின் பரப்பளவு, வேலை புரியும் தொழிலாளர்களது எண்ணிக்கை, தென்னிந்தியச் செல்வாக்கு, கங்காணிமாரின் தெய்வ நம்பிக்கைகள், நிர்வாகத்தினர் கொடுத்த ஆதரவு, தோட்டத்தில் பெறப்படும் இலாபம், கோவில்களைக் கட்டியோரது அழகுணர்ச்சி, இந்துமதம் பற்றிய அறிவு என்னும் பல காரணங்களால் நிர்ணயிக்கப்பட்டன. (37) தோட்டங்களில் உள்ள எல்லாக் கோவில்களும் திராவிடக் கட்டடக் கலையமைப்பினைக் கொண்டவையல்ல. ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலவற்றிற்கே கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பெரும்பான்மை யான கோவில்களும் அமைப்பு முறையில் ஒத்துள்ளன. மக்கள் கூடி நின்று வழிபடத்தக்கதாக ஒரு மண்டபமும் மூலஸ்தானமும் கொண்டவையாகவும், மண்டபத்தின் கூரை தகரத்தாலானதாகவும் இருக்கும். தென்னிந்தியாவில் தஞ்சாவூர், அறந்தாங்கி, பட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளிலிருந்துவந்த தேவர் சாதியைச் சேர்ந்த பெரிய கங்காணி மாரின் மேற்பார்வையில் அமைக்கப்பட்ட கோவில்கள் பெரும்பாலும் கதிரேசன் (சுப்பிரமணியர்) கோவில்களாகஅமைமந்தன. கோவில்கள் அமைக்கப்பட்டபோது தோட்டங்களில் வாழ்ந்தவர்களது பங்களிப்பு மாத்திரமன்றி சிலவேளைகளில் அயல் பகுதிகளில் வாழ்ந்தவர்களது உதவிகளும் பெறப்பட்டன. தோட்டங்களில் வாழ்ந்து நன்னிலைக்கு வந்த நகர்ப்புறத்தாரினாலும் சிலவேளைகளில் இந்தியாவுக்குக் குடியகன்றோரினாலும் தோட்டங்களில் கோவில்கள் கட்டுவதற்குப் பல்வேறு விதமான உதவிகள் (நிதி, பொருட்கள், உடலுழைப்பு) அளிக்கப்பட்டுள்ளன. (38)

சில தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள கோவில்கள் நகர்புறக் கோவில்கள் போன்று அதிக பிரபல்யமடையாவிடினும் இலங்கையின் மலையகப்பகுதியில் சிறப்பாக அத்தோட்டங்களின் அயல்பகுதிகளில் புகழ்பெற்றுள்ளன. இப்பிரபல்யமான தோட்டங்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு ('சாமி கும்பிடு') அயல் தோட்டங்களிலிருந்தும் நகர்ப்புறங்களில் இருந்தும் மக்கள் செல்வது வழக்கம். கற்றன் அருகிலுள்ள வட்டகொடையில் நடைபெறும் தெப்பத் திருவிழா, நாவலப்பிட்டிக்கு அருகிலுள்ள வெஸ்ற்கோல் தோட்டத்துத் திருவிழாவும் கூட்டுப்பிரார்த்தனையும் கற்றபொல தோட்டத்து சுப்பிரமணியர் ஆலயத் திருவிழா, பதுளைக்கு அருகிலுள்ள சார்னியா தோட்ட சுப்பிரமணியர் ஆலயத் திருவிழா, பிளக்வோட்டர் தோட்டத்து சுப்பிரமணியர் ஆலயத் திருவிழா, றாகலையிலுள்ள நடுக்கணக்குத் தோட்ட மாரியம்மன் கோவில் திருவிழா, நுவரேலியாவிலுள்ள பீட்ரு தோட்ட பங்குனி உத்தரத் திருவிழா, இந்திரத் தேர் ஆகியவை மிகவும் பிரபல்யம் வாய்ந்தவையாகும்.

நகர்ப்புறக் கோவில்கள்

தோட்டங்களுக்கு அருகிலுள்ள பட்டினங்கள், நகரங்களில் உள்ள இந்துக்கோவில்களும் தோட்டத்து மக்களுக்குச் சேவை யாற்றும் நிறுவனங்களாக விளங்குகின்றன. முக்கியமாகத் தோட்டத்து உத்தியோகத்தர்களது திருமண வைபவங்கள் நடைபெறும் இடங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளாகவும் ஏனைய வழிபாட்டுச் சடங்குகள் மேற்கொள்ளப்படுமிடங்களாகவும் உள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் இக்கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களையும் வேடிக்கைகளையும் பார்க்கும் பார்வையாளர்களாகவே பெரும்பாலும் இருந்து வருகின்றனர். சமூக ஏற்றத்தாழ்வுகள், பொருளாதார நிலை, தோட்டங்களிருந்து தொலை தூரத்தில் இருத்தல் என்னும் காரணங்களால் நகர்ப்புறக் கோவில்கள் தோட்டத் தொழிலாளரை அதிகம் கவராமல் உள்ளன.

புகழ்பெற்ற நகர்புறக் கோவில்கள் பல இலங்கை முழுவதும் உள்ளன. இக்கோவில்களைக் கட்டுவதற்கு நகரங்களில் வாழ்ந்த பல்வேறு மக்களும் சில குறிப்பிட்ட சாதியினரும் சில குறிப்பிட்ட தொழில்களையும் வர்த்தகத்தினையும் செய்தவர்களும் பெரிதும் உதவியுள்ளனர். குறிப்பாக 'நகரத்தார்' அல்லது 'வணிகர்' என அழைக்கப்பட்ட நாட்டுக்கோட்டைச் செட்டிமார், எண்ணெய் வியாபாரம், நகை வியாபாரம், வட்டிக்கடை என்பனவற்றில் ஈடுபட்ட செட்டிமார், பல்வேறு வர்த்தகத்தில் ஈடுபட்ட ஆறு நாட்டு வேளாளர் போன்றோர் கோவில்களைக் கட்டுவதற்கு முக்கிய காரணமாக இருந்தனர். (39) நாட்டுக்கோட்டைச் செட்டிமாரின் சமுதாய வாழ்வு கோவில்களோடு பின்னிப் பிணைந்திருந்தது.

சுப்பிரமணியர் அல்லது கதிரேசனுக்குக் கோவில்களை அமைக்குமுன் சுப்பிரமணியருடைய படத்தை வைத்து வழிபடக்கூடியதாக இருந்ததுடன் சுப்பிரமணியருடைய ஆயுதமாகிய வேல் ஒன்றை வைத்து வழிபாடு செய்யக்கூடியதாக பூசை விதிகள் எளிய முறைகளிலிருந்தன சிவன் கோவில்களை ஆகம விதிப்படி அமைப்பது தவிர்க்கப்பட்டது. கொழும்பு, மாத்தளை, கண்டி, கம்பளை, நாவலப்பிட்டி, புசல்லாவை, கலகா ஆகிய இடங்களில் செட்டிமார் கோவில்களைக் கட்டினர். இக்கோவில்களுக்குச் சொந்தமான கடைகளிலிருந்து வாடகையும் உண்டியல் வருவாயும் கிடைப்பதால் இக்கோவில்களில் நாளாந்த பூசைகளும் வருடாந்தத் திருவிழாக்களும் நடாத்தப்படுகின்றன. செட்டிமார் அமைத்த கோவில்களுடன் ஏனைய பல கோவில்கள் கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை குருநாகல், மாத்தளை, கண்டி, நுவரெலியா, பதுளை, ஆகிய மாவட்டங்களில் உள்ளன. இவ்விடங்களில் விநாயகர், கதிரேசன் அல்லது சிவசுப்பிரமணியர், மாரியம்மன் கோவில்கள் பல உள்ளன. மாத்தளை முத்துமாரியம்மன், கண்டி செல்வவிநாயகர், பண்டாரவளை சிவசுப்பிரமணியர், கொழும்பு கதிரேசன் ஆலயங்கள் மிகவும் பிரபல்யமானவையாகத் திகழ்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோட்டங்களிலுள்ள கோவில்களிலும் நகரக் கோவில்களிலும் திருவிழாக்களும் வேறு விழாக்களும் கொண்டாடப்படுவதுண்டு. தோட்டக் கோவில்களில் கொண்டாடப்படும் திருவிழாக்கள் ஒரு சில நாட்களுக்கு நடைபெறுவதுண்டு. 'சாமி கும்பிடு' எனப்படும் விழாவிலே உற்சவ மூர்த்தியை ஊர்வலமாக எடுத்துச் செல்லுமுன் இறைவனின் அருள் பெற்றவர் எனக் கருதப்படும் ஒருவரைக் கோடங்கியடித்தோ குறியெடுக்கச் செய்தோ தேர்ந்தெடுத்து அவரைப் புனித நீர் நிறைந்த நிறைகுடத்தைத் தூக்கச் செய்து அழைத்துச் செல்வர். (40) அவரும் அக்காலங்களில் மிகப் புனிதமாக வாழ்வது அவசியமாகும். அவ்வாறு புனித நீர் நிறைந்த நிறைகுடத்தை எடுத்துச் செல்பவருக்கு அனைவரும் மஞ்சள்நீர் வார்த்து வழிபடுவர். உற்சவ காலத்தில் பெண்கள் மா விளக்கு எடுப்பதும் பூத்தட்டெடுப்பதும் வழக்கம். மாரியம்மன், கதிரேசன், பாடல்களைப் பாடி, 'குரவை' யிட்டுப் பக்தியோடு வரிசையாக இவற்றை எடுத்துச் செல்வது வருடாந்த நிகழ்ச்சியாகும். திருவிழாக்களின்போது சுவாமியை ஊர்வலமாக எடுத்துச் செல்வதுடன் பஜனை, பக்திப்பாடல்கள் பாடுவதும் கரக ஆட்டம், காவடி ஆட்டம், கரடியாட்டம், குரங்காட்டம் முதலானவை ஆடப்படுவதும் பெண்கள் கும்மியடிப்பதும் உண்டு. தீ மிதித்தல், வேல் குத்திக் காவடியாடுதல் போன்ற நிகழ்ச்சிகளும் நடைபெறத் தவறுவதில்லை. உற்சவகால இறுதிநாளில் காப்பவிழ்த்து மஞ்சள் நீராடி புனிதநீர் நிறைந்த குடத்தை ஊர்வலமாகக் கொண்டு சென்று அருவிகளிலோ ஆறுகளிலோ கலக்கச் செய்து (இது 'கரகம் குடி விடுதல்' எனப்படும்) அனைவரும் நீராடி இறை வணக்கத்தோடு இல்லங்களை ஏகுவர். (41)

நகர்ப்புறக் கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களிலும் தோட்டத் தொழிலாளர்கள் கலந்துகொள்வர். இலங்கையில் இனப்பிரச்சனைகளும் வன்செயல்களும் நடைபெற முன்னர் பெரும்பாலான நகர்ப்புறக் கோவில்களிலும் பல நாட்களுக்கு திருவிழாக்கள் நடைபெற்றதுண்டு. அண்மைக்காலங்களில் மிகப் பிரசித்திபெற்ற கோவில்களில் மூன்று நாட்களும் ஏனையவற்றில் ஒரு நாளும் திருவிழா நடைபெறுகின்றது. நகரங்களிலுள்ள கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களுக்கு நகரத்து வனிகர்களிடமிருந்து அவர்களது தகுதிக்கேற்ப 'வரி' அல்லது 'மகமை' (நிதி) வாங்குதல் வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனது நிலைக்கேற்ப பருவகாலங்கள் ஏற்படுகின்றன. இப்பருவ காலங்களுக்கேற்ப தமிழ்மக்களது விரத நாட்களும் பண்டிகைகளும் நிர்ணயிக்கப்படுகின்றன. சித்திரையிலிருந்து பங்குனி மாதம் வரை பின்வரும் விசேட நாட்கள் இந்துக்களால் கொண்டாடப்படுகின்றன. (42)

சித்திரை — புதுவருடப் பிறப்பு, சித்திரா பௌர்ணமி.

வைகாசி — வைகாசி விசாகம்.

ஆனி — ஆனி உத்தரம், ஆனித் திருமஞ்சனம்.

ஆடி — ஆடிப் பெருக்கு, ஆடிச்சுவாதி ஆடிக்கிருத்திகை, ஆடிப்பூரம், ஆடிவேல். வரலட்சுமி விரதம்.

ஆவணி — விநாயக சதுர்த்தி, ஓண விழா, ஆவணி அவிட்டம், கிருஷ்ண ஜெயந்தி, ஆவணி மூலம், ஆவணி ஞாயிறு, நாக பஞ்சமி.

புரட்டாதி — நவராத்திரி, புரட்டாதிச்சனி.

ஐப்பசி — கந்தசட்டி (சூரன்வதை), தீபாவளி, கேதார கௌரி நோன்பு, வெள்ளி விரதம்.

கார்த்திகை — கார்த்திகை நோன்பும் விளக்கீடும், கார்த்திகைச் சோமவார விரதம், விநாயக சட்டி விரதம்.

மார்கழி — திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை, மார்கழிப் பிள்ளையார், கோலமிடல், மார்கழிப் பாவை நோன்பு, திருவாதிரை நோன்பு, வைகுண்ட ஏகாதசி,

தை — தைப்பூசம், தைப்பொங்கல் (சூரிய பொங்கல்), மாட்டுப் பொங்கல்.

மாசி — மாசி மகம், சிவராத்திரி.

பங்குனி — உத்தர விழா, காமன் பண்டிகை. (43)

இந்துக்கள் பருவகாலங்களுள் சிறந்ததாக இளவேனிற் காலத்தைக் (சித்திரை, வைகாசி) கருதுவர். இவ்விளவேனிற்காலத்தில் ஆண்டுப் பிறப்பாகச் (புதுவருடமாக) சித்திரை கொள்ளப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தின் முதலாவது நாளன்று பொங்கி இறைவனை வழிபடுவது வழக்கம். சித்திரை மாதம் சித்திரை நட்சத்திரம் கூடிய பூரணை சித்திரா பூரணையாகும். அந்நாளில் கோவில்களில் மக்கள் பொங்கலிட்டு ஏழைகளுக்குச் 'சித்திரைக்கஞ்சி' எனப்படும் கஞ்சி காய்ச்சி ஊற்றுவதுடன் சித்திரக்குப்தருடைய கதையை ஒருவர் வாசிக்க ஏனையோர் பயபக்தியுடன் கேட்பர். வைகாசி மாதத்தில் விசாக நட்சத்திரத்தில் வைகாசி விசாகம் கொண்டாடப்படுகின்றது. வைகாசி விசாகத்தினை இந்துக்களும் பௌத்தர்களும் கொண்டாடுவது வழக்கம். புத்தபெருமான் பிறந்ததும் ஞானம் பெற்றதும் பரிநிர்வாணம் அடைந்ததும் வைகாசி விசாகத்தன்றாகும். தோட்டங்களில் வாழும் இந்திய வம்சாவழியினர் கிருஷ்ணரின் மறு அவதாரமாகப் புத்தரை நினைத்து வழிபடுவதுடன் அவரைப் 'பெருமாள்சாமி' என அழைப்பதுமுண்டு. (44) ஆனிமாதம் முதுவேனிற் காலமாகும். சில இந்துக்கள் ஆனி உத்தரத்தன்று கோவிலுக்குச் சென்று வழிபடுவர். மங்களகரமான மாதமாகக் கருதப்படும் ஆடி மாதத்தில் ஊவாப் பகுதியிலுள்ள தோட்டக் கோவில்களில் சிறப்பாகக் கதிரேசன் கோவில்களில் திருவிழாக்கள் ('சுவாமி கும்பிடு') நடைபெறுவது வழக்கமாகும். (45) ஆடிப்பிறப்பும் ஆடிப்பூசமும் தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் இந்துக்களிடையே பிரபல்யமானவையாக உள்ளன. தென்னிந்தியாவில் ஆடித்திங்களில் முதன் முதலாக ஆறுகளில் நீர் பெருகி வருவதைக் களிப்புடன் வரவேற்றுக் கொண்டாடும் விழா ஆடிப்பெருக்காகும். ஆடிமாதம் பதினெட்டாம் நாளில் கொண்டாடப்படுவதனால் இதனை 'ஆடிப் பதினெட்டு' அல்லது பதினெட்டாம் பெருக்கு' என்பர். அம்பிகை திருஅவதாரம் செய்த சிறப்புத் திருநாளாக ஆடிப்பூரம் கருதப்படுகின்றது. இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய ஆடிமாதத்தில் கொழும்பில் ஆடிவேல் திருவிழா சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. தோட்டங்களில் வாழும் இந்துக்கள் இம்மாதத்தில் கதிர்காமம் செல்வது வழக்கம். தோட்டங்களில் வாழும் மலையாளிகள் ஆவணி மாதத்துப் பூரணையினைத் தமது புதுவருடமாகக் கருதி ஓண விழாவினைக் கொண்டாடுவர். மலையாளிகள் வசிக்கும் அவிசாவளை, எட்டியாந்தோட்டைப் பகுதிகளிலுள்ள தோட்டங்களிலும் கொழும்பிலும் ஓணப் பண்டிகை கொண்டாடப்படுகின்றது. (46) ஓண நட்சத்திரத்திலேயே கிருஷ்ணர் பிறந்தார் என்ற நம்பிக்கை சிலரிடையே நிலவுகின்றது. வைஷ்ணவரும் கிருஷ்ணரை வழிபடும் இந்துக்களும் கிருஷ்ணர் பிறந்த தினமாகக் கருதப்படும் கிருஷ்ணஜெயந்தியையும் கொண்டாடுவர். சூரிய வழிபாடு செய்பவர்கள் ஆவணிமாத ஞாயிற்றுக்கிழமைகளில் விரதம் அனுட்டித்து ஆவணி மாதத்துக் கடைசி ஞாயிற்றுக்கிழமை சூரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுக்குப் பொங்கி வழிபடுவதுண்டு. புரட்டாதி மாதத்தில் கொண்டாடப்படும் நவராத்திரிவிழா கோவில்களிலும் பாடசாலைகளிலும் வீடுகளிலும் கொண்டாடப்படும். புரட்டாதி மாதத்தில் அமாவாசையைத் தொடர்ந்து வருகின்ற ஒன்பது நாட்களும் நவராத்திரி என்றும், பத்தாவது நாள் விஜயதசமி, அல்லது வெற்றித் திருநாள் என்றும் அழைக்கப்படும். மக்களுக்கு வீரம், செல்வம், கல்வி ஆகிய மூன்றும் தேவையென்பதை உணர்த்தும் விழாவாக இது விளங்குகின்றது. இதனால் விழாக்காலத்தில் முதல் மூன்று நாட்களும் வீரத் திருமகளான துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களும் செல்வத்தையளிக்கும் திருமகளான இலக்குமியையும், கடைசி மூன்று நாட்களும் கல்விக்குரிய கலைமகளையும் வழிபட்டுக் கொண்டாடுவர். பத்தாவது நாளான விஜயதசமி அன்று ஆயுதபூசை செய்யும் திருநாளாகும். சனிக்கிழமைகளில் முக்கியமாகப் புரட்டாதிச் சனிக்கிழமைகளில் சனிபகவானுக்கு எள்எண்ணெய் விளக்கு எரித்து விரதமிருந்து சனிபகவானுடைய வாகனமாகக் கருதப்படும் காகத்திற்கு உணவு படைத்து உண்ணும் பழக்கமும் இருந்து வருகின்றது. முருகப்பெருமான் சூரனைச் சங்காரித்ததை முருகன் கோவில்களில் கந்தசஷ்டியன்று கொண்டாடுவது வழக்கம். சில கோவில்களில் இவ்விழா ஆறு நாட்களுக்குக் கொண்டாடப்படுவதுமுண்டு. தோட்டத்திலுள்ள இந்துக்கள் யாவரும் வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும் திருநாளாக தீபாவளி விளங்குகின்றது. கார்த்திகை மாதத்தில் வீட்டு விளக்கீடு, குமாராலய தீபம், சர்வாலய தீபம் முதலியன நிகழ்கின்றன. வீட்டிலும் வீட்டைச் சுற்றியுள்ள இடங்களிலும் தீபம் ஏற்றி வணங்குதல் வீட்டு விளக்கீடு எனப்படும். முருகன் கோவிலில் தீபம் ஏற்றி வழிபடுவதும் சொர்க்கப்பனை எரிப்பதும் சர்வாலய தீபம் எனப்படும்.(47) மார்கழி மாதத்தில் இறைவனை வழிபடுதல் சிறந்தது எனக் கருதப்படுவதனால் மார்கழி மாதத்தில் மங்கள நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவது இல்லை. தோட்டங்களில் இந்துப்பெண்கள் மார்கழிப்பீடை, பிணி, வறுமை நீங்கிச் செல்வ விருத்தியும் நற்பேறுகளும் பெற மார்கழிப்பிள்ளையார் பிடித்து வீட்டுவாசலைச் சாணத்தால் மெழுகிக் கோலமிட்டு வணங்குவர். பஜனைக் கோஷ்டியினர் திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை, தேவாரம் என்பவற்றைப் பாடிக்கொண்டு தோட்டத்தை வலம் வருவதுண்டு. ராமர் பஜனை செய்வோர் 'கோவிந்தா' என்றும், சுப்பிரமணியர் பஜனை செய்வோர் 'அரோகரா என்றும் சப்திப்பது வழக்கம். மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதேசி, விநாயக சஷ்டி விரதம் என்பனவும் அனுஷ்டிக்கப்படும். மார்கழிப்பீடைகள் நீங்கித் தைமாதம் பிறந்ததும் வழியும் பிறக்கும் என்னும் நம்பிக்கை பலரிடையே உள்ளது. தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல்நாள் பொங்கல் நாளாகும். மாடுகள் வளர்ப்போர் அடுத்த நாள் 'மாட்டுப்பொங்கல்', அல்லது 'பட்டிப்பொங்கல்', அல்லது 'பட்டி ஆவுடையார் பொங்கல்' செய்வதுண்டு. மாசி மாதத்தில் இந்துக்கோவில்களில் சிறப்பாகக் கொண்டாடப்படும் இரவு நிகழ்ச்சியாக சிவராத்திரி விளங்குகின்றது. சிவராத்திரியன்று கோவில்களில் பூசை, பஜனை, கதாப்பிரசங்கம், கலைநிகழ்ச்சிகள் என்பன நடைபெறுவதுண்டு. வாடைக்காற்றும், நடுங்கும் குளிரும். வருத்தும் பனியும் நீங்கி வாடையால் இலையுதிர்ந்த மரங்களும் செடிகளும் புதுத் தளிரைக் கொண்டு பூக்கும் வசந்த காலம் அரும்புவதைக் காட்டும் மாதம் பங்குனியாகும். இம்மாதத்தில்வரும் உத்தரநாளில் இறைவன் இறைவியை மணம் செய்ததாக இந்துக்கள் நம்புவர். "இறைவன் தனிமை நீங்கிச் சக்தியோடு சேர்ந்து காதல் வாழ்வு வாழ்வதற்காக உத்தரத் திருமணவிழா கொண்டாடப்படுகிறது. இறைவனும் இறைவியும் திருமணம் செய்த பங்குனி உத்தரநாளிலே ரதிதேவி இரங்கிக் கேட்டமையால் இறைவன் ரதிமேல் இரக்கம் கொண்டு தாம் முன்னர் தம் நெற்றிக்கண்ணால் எரித்த மன்மதனை (காமனை) மன்னித்து அவனை உயிர்த்தெழச் செய்து அருள்புரிந்தார்" என இந்துக்கள் நம்புவர். (48)

**காமன் பண்டிகை**

தோட்டங்களில் ஆண்டுதோறும் மாசி மாதத்தில் வளர்பிறை மூன்றாம்நாள் தொடங்கி நிறைநிலாவரை காமன் பண்டிகையை மதச்சடங்காகப் பக்தியுடன் கொண்டாடுவர். (49) காமனுக்கெனக் கோவில் இல்லை. ஆனால், பெரும்பாலான தோட்டங்களில் அப் பண்டிகைக்கென ஒதுக்கப்பட்ட 'காமன் பொட்டல்' எனப்படும் வட்டக்களரி நிரந்தரமாக இருக்கும். விழாவுக்கு நாள் குறித்ததும் காமன்கூத்து நடத்தும் 'வாத்தியார்' தலைமையில் ஆற்றங்கரை அல்லது நீரோடைக்குச் சென்று 'கரகம் பாலிக்கப்படும்'. அருவிக் கரைக்குச் சென்ற அனைவரும் நீராடிய பின்னர் விழா சிறப்பாக நடக்க இறைவனை வேண்டிக் குடத்தில் அல்லது செம்பில் தூய நீர் எடுத்துப் பூஜை செய்யும் நிகழ்ச்சியே 'கரகம் பாலித்தலாகும்'. பூஜை முடிந்ததும் காமன்கூத்தில் பங்குகொள்வோரைப் புனிதப் படுத்தியதற்கு அறிகுறியாக மஞ்சள் நீரில் தோய்த்தெடுத்த நூலைக் கையில் கட்டுவதை 'காப்புக்கட்டுதல்' என்பர். இந்நிகழ்ச்சிகள் முடிந்ததும் கலச நீரோடும் கரகத்தோடும் யாவரும் காமன்பொட்டலுக்கு வருவர். கலசத்தில் மாவிலை சூழ்ந்த தேங்காய் வைத்து மஞ்சல் கட்டப்பட்டிருக்கும். காமன்பொட்டல் அல்லது மன்மதஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாபனம் செய்யுமிடம் தோட்டத்தில் ஓர் ஒதுங்கிய சுத்தமான பகுதியில் அமையும். அதற்கென ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தண்ணீர் தெளித்து, சாணத்தால் மெழுகி மஞ்சள் நீர் தெளித்து, கூத்தின் அடித்தளமான ஆடலும் பாடலும் மேற்கொள்ளக்கூடியதாக ஓர் அடி உயரமும் ஆறடி நீளமுமான 'காமன் திண்ணை', அல்லது மேடை ஒன்று அமைக்கப்படும். சில தோட்டங்களில் நிரந்தரமாக ஒரே இடத்தில் இத்திண்ணையை அமைப்பதுமுண்டு. தோட்டத்தில் காமன்கூத்து ஆரம்பிக்கப்பட்டபோது இந்தியாவிலிருந்து வாத்தியார் கொண்டுவந்த மண்ணைப் புதைத்துள்ள இடமாகவும் அவ்விடம் கருதப்படுவதுண்டு.

'காமன்' சின்னமாக 'கம்பம் நடுதல்', அல்லது 'காமன் நடல்', அல்லது காமன் ஊன்றுதல் நடைபெறும். 'அன்பாய் வளர்த்த தொரு இன்பமுள்ள பேய்க்கரும்பும், ஓங்கார மாவிலையும், ஓசையுள்ள பொன்னரசும் ஆனை சேனை வைக்கோல் பிறிதானாகச் சுத்திய பின் அதனுள் விராட்டியொன்று அன்பாகத் தானூட்டி ஆழக் குழி தோண்டி அதிலே பால் ஊத்தி அழகான வெள்ளிப்பணம் சதிராகவே போட்டு சொந்தமாய் காமன் நட்டு,' தப்பு முழக்கத்துடன் பாடிப் பூசை செய்து வழிபாடு நடாத்தப்படும். (50) விழா ஆரம்பத்திலிருந்து ஒவ்வொரு நிகழ்ச்சியின் போதும் மங்களத் தப்பு அடிக்கப்படும். காமன் ஊன்றியதும் கூத்து ஆரம்பிப்பதற்கு அறிகுறியாக 'லாவணி' பாடி மன்மதன், ரதிவேடம் தாங்குவோர் கம்பத்தைச் சுற்றிச் சிறிதுநேரம் ஆடுவர். (51) கம்பம் நட்டதிலிருந்து காமன் கூத்து முடியும்வரை அதில் பங்குகொள்வோர் அனைவரும் விரதமிருந்து மிகவும் தூய்மையாக வாழ்வார்கள்.

கம்பம் நட்ட மறுநாளிலிருந்து கூத்து ஆரம்பமாகும். மன்மதன் ரதிவேடம் தாங்கியோரின் ஆட்டங்கள் இந்நிகழ்ச்சிகளில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. மாலையில் கம்பத்தருகில் பூசை முடிந்த பின்னர் மன்மதனும் ரதியும் ஆடை அணிகளை அணிந்து திருமணத்திற்கு முன்னர் ஆடும் காதல் லீலை ஆட்டங்களை ஆடுவர். இவர்களது ஆடல் பாடல்களுக்குத் 'தப்பு' பிரதான இசைக்கருவியாக அமைகிறது. லயங்களைச் சுற்றி ஒவ்வொரு வீடாக ஆடிவரும்போது, ஆட்டம் முடிந்ததும் பூசை செய்து உண்டியலில் 'காமன் காணிக்கை' இடுவார்கள். சிலர் தமது வீடு நாடிவந்த கூத்தர்களையும் கோஷ்டியினரையும் தங்கள் தகுதிக்கேற்ப சிற்றுண்டிகள் கொடுத்துக் கௌரவிப்பதுண்டு.

காமன்கூத்தில் இறுதிநாளான 'காமதகன' விழா மிக முக்கியமானது. 'காமதகன' விழா விடியும்வரை நடைபெறும் நிகழ்ச்சி ஆகும். பெரும்பாலும் பௌர்ணமி தினத்தன்று அல்லது வெள்ளி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனிக்கிழமை நாட்களாக நாள் குறிப்பது வழக்கம். விடியும்வரை விழாவில் கலந்து மறுநாள் பகல் நிகழ்ச்சிகளிலும் கலந்து ஓய்வெடுப்பதற்கு வசதியாக இவ்வேற்பாடுகள் அமையும்.

காமதகன விழாவன்று காமன்பொட்டல் சாணத்தால் மெழுகப்பட்டு, கம்பத்தைச் சுற்றிப் பச்சைப்பந்தல் கட்டப்படும். நான்கு மூலைகளிலும் வாழை அல்லது கரும்பு நடப்படும். இப்பந்தலுக்கு அருகில் மணவறைப் பந்தலும் கம்பத்துக்கு எதிரில் சற்றுத் தொலைவில் ஒருவர் ஏறி அமரத்தக்க ஓர் உயர்ந்த மேடையும் அதன் அருகில் மூவர் அல்லது நால்வர் அமரத்தக்க சிறிது தாழ்ந்த மேடையும் அமைக்கப்படும். காமன்பொட்டலைச் சுற்றித் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்படுவதுடன் மின்விளக்குகளால் அலங்கரிக்கப்படுவதுமுண்டு. காமதகனத்தன்று தோட்டம் திருவிழாக் கோலம் கொள்ளும். மக்கள் நீராடி விரதமிருந்து காமதகனக் கூத்தினைப் பார்ப்பார்கள். மாலையில் காமனுக்குப் பூசை நடைபெறும். கூத்து நள்ளிரவு ஆரம்பமாகும்வரை சில தோட்டங்களிள் கலை நிகழ்ச்சிகள் நடாத்தப்படுவதுண்டு. நள்ளிரவு கூத்து ஆரம்பமாவதற்கு அறிகுறியாகத் தப்பு அடிக்கப்படும். பெண்கள் மாவிளக்கு எடுத்து வருவதுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும் தப்பு முழங்க ஊர்வலமாக வந்து காமனுக்கு பூசை நடைபெறும். இதன் பின்னர் திருமண நிகழ்ச்சிக்காக ரதிவேடம் பூண்டவர் மணவறையில் அமருவார். மன்மதனை ஆடை அணிகலன்களால் அலங்கரித்து மங்களத்தப்புடன் அழைத்துவந்து திருமணப்பாடல்கள் பாடி அதற்கேற்ப ஆடி ரதிக்குத் தாலி கட்டப்படும். தாலி கட்டியதும் ரதியும் மன்மதனும் அருகில் உள்ள லயங்களுக்கு ஊர்வலமாக ஆடிச்சென்று மீண்டும் காமன்பொட்டலுக்குத் திரும்பிவந்து இருவருமாகப் பல்வேறு ஆட்டங்களை ஆடிக்கொண்டிருக்கும்போது சங்கு, சேகண்டி (சேமக்கலம்) தப்பு முழங்க சிவனாக வேடம் தரித்தவர் அழைத்துவரப்பட்டு உயர்ந்த மேடையில் அமர்த்தப்படுவார். சிவனாக வேடமிட்டவர் கண்மூடித் தவநிலையில் இருப்பார். மூன்று அல்லது நான்கு தேவர்கள் தாழ்ந்த மேடையில் அமர்ந்திருப்பர். இந்திரனின் தூதன் விடியற்காலை வேளையில் ஓலை கொண்டுவந்து மன்மதனிடம் கொடுப்பார். இதன்பின்னர் மன்மதன் ரதியிடம் விடைபெறும் ஆட்டம் இடம்பெறும். சிவனுடைய தவத்தினை அழிப்பதற்கு மன்மதன் புறப்பட ரதி தடுப்பதும் மன்மதன் தர்க்கம் செய்வதும் வாக்குவாதங்கள் மிகுவதும் காமன் தன் விருப்பப்படி போருக்குச் செல்வதும் முக்கியமான உச்சக்கட்டமாகும். கரும்பால் செய்யப்பட்ட வில்லையும் மலர்க்கணையையும் ஏந்தி சிவனை நோக்கிப் போருக்குச் செல்பவர்போல் வில்லில் நாணேற்றி ஆடுவதுடன் போருக்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லும் பாடல்களையும் பாடுவர். மன்மதன் சிவன்மீது அம்பெய்ததும் சிவன் தவம் கலைந்து சினங்கொண்டு மன்மதனை எரிப்பார். அப்பொழுது ஏற்கனவே குவித்துவைக்கப்பட்ட தேயிலைக்குச்சுகள் எரிக்கப்பட்டுக் காமதகனம் மேற்கொள்ளப்படும்போது விடிந்து சூரிய உதயமாகும். ரதிவேடம் தரித்தவர் வெள்ளைச்சேலை அணிந்து மடிப்பிச்சை எடுத்து வரும்போது 'ஒப்பாரி' வைக்கப்பட்டுப் பொட்டலில் அவல ஆட்டம் ஆடப்படும். (52) ஒப்பாரி பாடும்போது மக்கள் 'ஐயோ' என்று அவலக்குரல் எழுப்புவர். இதனைத் தொடர்ந்து சிறு தேர்கட்டி மன்மதனைப் போன்ற படம் ஒன்றினைத் தூக்கிக்கொண்டு வெள்ளைச்சேலை கட்டிய ரதியுடன் லயங்கள் தோறும் ஒப்பாரி பாடிவரும்போது மடிப்பிச்சையாகப் படியரிசியும் காணிக்கையும் கொடுக்கப்படும். இதன்பின் காமன் 'எரிந்த கட்சி' யைச் சேர்ந்தோர் நீர்நிலைக்குச் சென்று ஈமக்கிரியைகளைச் செய்து விழாவை முடிப்பர். 'எரியாத கட்சி' யைச் சேர்ந்தோர் மூன்றாம் நாள் மாலை 'உயிர்த்து எழும்பும்' விழாவை நடாத்துவார்கள். அதற்காக மன்மதன் வேடம் தரித்தவர் வெள்ளைத்துணியால் மூடப்பட்டுக் கம்பம் ஊன்றிய இடத்தில் படுத்திருப்பார். ரதி சிவனிடம் மன்மதனை உயிர்ப்பிக்கும்படி மாங்கல்யப்பிச்சை கேட்டு மன்றாடுவாள். சிவன் இரங்கித் தாண்டவம் ஆடியபடி நீர் தெளித்து மன்மதனை உயிர்பித்து ரதியுடன் சேர்த்துவைத்ததும் பூசை செய்யப்பட்டு விழா முடிவுறும். சில தோட்டங்களில் சேகரித்த பொருட்களைக் கொண்டு 'காமன்விருந்து' நடைபெறுவதுண்டு. (53)

**அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர்**

சமய நம்பிக்கைகளைக் கலைகளுக்கூடாக வளர்க்கும் ஏதுக்களாகக் காமன்கூத்து, அர்ச்சுனன் தபசு, பொன்னர் - சங்கர் என்பன விளங்குகின்றன. அர்ச்சுனன் தபசு கூத்து நடைபெறமுன்னர் எழுபது அடிக் கம்பம் நடும்போது வழிபாடுகள் நடத்தி 'மாயவருக்கும்' சிவனுக்கும் பூசைசெய்வது வழக்கம். அர்ச்சுனன், கிருஷ்ணன், காளி போன்றோர் மேடையில் தோன்றும்போது தீபாராதனை செய்யப்படுவதும் தேங்காய் உடைத்து அபிஷேகம் செய்யப்படுவதும் வழக்கம். அர்ச்சுனன் தவம் செய்ய எழுபது அடிக் கம்பத்தில் ஏறும்போது 'கோவிந்தா' எனச் சப்தமிட்டு வணங்குவதும் கம்பத்திலிருந்து பூமாரி பொழியும்போது மக்கள் அம்மலர்களைப் பொறுக்கிக் கண்களில் ஒற்றிக்கொள்வதும், அர்ச்சுனன் கம்பத்திலிருந்து இறங்கியதும் அனைவருக்கும் திருநீறு கொடுப்பதும் சமய நம்பிக்கைக்கு வலுவூட்டுகின்றன. (54) இதேபோன்று சில தோட்டங்களில் ஆடப்படும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னர் - சங்கர் கூத்தும் தெய்வ அந்தஸ்துப் பெற்ற குன்னுடையாயின் பெருமையை உணர்த்தும் விழாவாகவும் இறுதிக் காட்சியான 'படுகளக் காட்சி' சமயச்சடங்காகவும் கருதப்படுகின்றன. (55)

**சமூக முக்கியத்துவம்**

தோட்டச் சமூக அமைப்பில் இக்கூத்துக்களும் சடங்குகளும் கலைநிகழ்ச்சிகளும் குறிப்பிடத்தக்க சமூக முக்கியத்துவம் பெற்றவையாக உள்ளன. தோட்டச் சமூகத்திலுள்ள பாகுபாடுகளைப் புலப்படுத்துவனவாக அவை விளங்குவதுடன் ஒவ்வொரு சாதியினரதும் கடமைகளும் உரிமைகளும் வரையறுக்கப்படுகின்றன. (56) பிராமணர் அல்லாதவர்களதும் ஆதி திராவிடர்களதும் கடமைகளைத் தொடர்ந்தும் கடைப்பிடிக்கச் செய்வதன் மூலம் தோட்டங்களில் தொடர்ந்தும் சாதி அமைப்புப் பேணப்பட்டது. உதாரணமாகக் காமன் கூத்தில் கிரியைகளையும் பூசையையும் பிராமணரல்லாத உயர்சாதிப் பண்டாரமே மேற்கொள்வார். ஆதி திராவிடர் அல்லாத உயர்சாதியினர் சமைத்த உணவுவகைகளையே யாவரும் உண்பர். காமன் கூத்தில் தப்பு அடிப்பதன்மூலமும் சலவைத் தொழிலாளர்கள் தீப்பந்தங்களை ஏற்றுவதன்மூலமும் சாதிப் படிமுறையானது தொடர்ந்தும் தோட்டங்களில் பேணப்படுவதற்கு வழியமைக்கப்பட்டது. (57)

வேற்றுமைக்குள் ஒற்றுமை ஏற்படுவதும் இயற்கையானதே. இச்சடங்குகளும் விழாக்களும் குடும்ப அங்கத்தவர்களையும் உற்றார், உறவினர்களையும், நண்பர்களையும் தோட்ட மக்களையும் அயல் கிராமத்தவர்களையும் ஒன்றிணைக்கவும் இடைவினைகள் ஏற்படவும் உதவுகின்றன. தாம் ஒரே தோட்டத்தினைச் சேர்ந்தவர்கள் என்ற மனோபாவத்தை வளர்ப்பதுடன் ஏனைய தோட்டங்களையும் கிராமங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கவும் உதவுகின்றன. தோட்டங்களில் ஒற்றுமைமூலம் சாதனைகளை ஏற்படுத்த முடியும் என இவை புகட்டியதுடன் அயல் தோட்டங்களிலும் கிராமங்களிலும் வாழும் மக்களையும் குறிப்பாக சிங்கள மக்களைத் தமிழ் மக்களுடன் இணைக்கும் பாலமாகவும் இவை விளங்குகின்றன. இவை சுத்தம், ஒழுங்கு, கடமை, கட்டுப்பாடு ஆகிய வாழ்வின் விழுமியங்களை மக்களுக்குப் போதிக்கின்றன. விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, சகிப்புத்தன்மை, பொறுமை, மனஅமைதி, மனவைராக்கியம், கூச்சம் தெளிதல், வாழ்வில் நம்பிக்கை, சகோதரத்துவம், ஒருவரையொருவர் புரிந்துகொள்ளல் என்பனவற்றைத் தனிநபர்களுக்கும் சமூகத்திற்கும் போதிக்கின்றன. சமூகத்தில் உள்ள கலைஞர்கள் ஆதரிக்கப்பட்டுக் கலைகள் வளர்க்கப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதச்சடங்குகளின்போதும் திருவிழாக்கள், பண்டிகை நாட்கள், தொழிற்சங்க மகாநாடுகளின்போதும் இயல், இசை, நாடகங்கள், நாட்டியம், கிராமிய விளையாட்டுக்கள் என்பன நடத்தப்படுகின்றன. சில நிகழ்ச்சிகளில் இயல், இசை, நாடகம் என்னும் மூன்றும் கலந்துள்ளதுடன் சில நிகழ்ச்சிகள் சடங்குகளாகவும் பொழுதுபோக்கிற்கான ஆடல், பாடல், விளையாட்டு நிகழ்ச்சிகளாகவும் உள்ளன. உதாரணமாகக் காவடி, கரக ஆட்டங்களைக் கூறலாம்.

இசைக்கருவிகளாக உடுக்கு, மேளம், தப்பு, பறை, சங்கு சாலரா, கிளாரினற் என்பன உபயோகிக்கப்படுகின்றன.

எதுகை, மோனை நிரம்பிய இசைப்பாடல்களுடன் கைகளையும் கால்களையும் ஒத்திசைவாக அசைத்துப் பெண்களால் கும்மி விளையாடப் படுகின்றது. கும்மியின்போது பாடப்படும் பாடல்கள் பலவகைப்பட்டன. இயற்கையைப் பாட்டில் வர்ணிப்பனவாகவும் வாழ்வின் இன்பங்களையும் வசந்த காலத்தையும் வயல்களின் விளைச்சலையும் கடவுள் வழிபாட்டையும் வாழ்வின் நடைமுறை மெய்மையையும் எடுத்துக்காட்டுவனவாகவும் அவை விளங்குகின்றன. (58) கும்மி நடனத்துக்கு ஏற்றவாறு கைகொட்டியும் பாட்டுப்பாடியும் நடனமாடுவது 'கொம்மாய்' எனப்படும். ஒயில் கும்மி என்றும், ஒயிலாட்டம் என்றும் சொல்லப்படும் ஆட்டத்தை ஆண்களும் ஆடுவர். (59) கால்களில் சலங்கைகள் கட்டிக்கொண்டு ஆடப்படும் இவ்வாட்டத்திற்கான முதலாவது அம்சம் கணபதிக்குரிய பாடலை அண்ணாவியார் பாட ஆடுவோர் ஒத்திசைவாக வலப்புறமாக ஆடத் தொடங்குவது ஆனந்தக்கும்மியாகும். கோல்கொண்டு சிறுமிகள் கூட்டமாக ஆடுவது கோலாட்டமாகும். கோலாட்டமும் கும்மியும் சமூக நடனங்களாகக் கருதப்படுகின்றன.

தோட்டங்களில் கரக ஆட்டமும் காவடி ஆட்டமும் மிகவும் முக்கியமானவையாகவும் பிரபல்யமடைந்தனவாகவும் உள்ளன. பால் காவடி, பன்னீர்க்காவடி, வேல்குத்திய காவடி, செதில்காவடி தூக்குக்காவடி, துலாக்காவடி எனப் பலவகையான காவடியாட்டங்கள் உள. காவடிகளின் அளவு, அமைப்பு, அதில் எடுத்துச் செல்ல வேண்டிய காணிக்கைப்பொருட்கள், தூக்கிச் செல்லவேண்டிய முறை என்பனவற்றிற்குச் சில சம்பிரதாயங்களும் நியதிகளும் கவனிக்கப் படுகின்றன. காவடி ஆடுபவர்களுக்குத் துணையாகப் பக்திப்பாடல்களைப் பாடுவோரும் வாத்தியக்காரரும் செல்வதுண்டு. பெரும்பாலும் காவடிச்சிந்து பாடப்படும். சிலவேளைகளில் தலையிலும் கழுத்திலும் தோளிலும் காவடி சுழலுமாறு ஆடுவதும் உண்டு. பக்திக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுவதுடன் தமது வித்தைகளைக் காட்டுவதற்காகத் தொழிலாக ஆடப்படுவதுமுண்டு. (60) காவடியாட்டம் உயர்நிலப் பிரதேசத்திலும் இடைநிலப் பிரதேசத்திலும் முக்கியத்துவம் பெற்றுள்ளது; தாழ்நிலப் பிரதேசத்தில் குறைவாகவே காணப்படுகின்றது.

கரக ஆட்டம் மாரியம்மன் வழிபாட்டுடனும் முருக வழிபாட்டுடனும் மிக நெருங்கிய தொடர்புகொண்டதாக உளது. வழிபாட்டுச் சடங்காக ஆடப்படும் கரகாட்டம் 'சக்தி கரகாட்டம்' என்றும் தொழிலுக்காக, அல்லது வருவாய்க்காக ஆடுவது 'ஆட்டக் கரகம்' என்றும் அழைக்கப்படும் (61) சிறுகுடம் ஒன்றில் புனிதநீர் நிரப்பி அதன் வாயில் தேங்காயும் உச்சியில் எலுமிச்சம்பழமும் வைத்து மலர்களாலும் வேப்பிலையாலும் அலங்கரித்து அதனைத் தலையில் வைத்து உடுக்கு, பம்பை, உருமி, தவில், நாதசுரம், தமுக்கு ஆகிய பக்கவாத்திய இசைகளுக்கேற்ப ஆடுவது கரகாட்டமாகும். உடுக்கு அடித்துப் பாடுபவர்கள், வியாதிகளுக்குக் குறி சொல்பவர்கள் என இருவகைக் 'கோடங்கியர்' உள்ளனர். குல தெய்வங்களையும் மாரியம்மனையும் முருகனையும் அழைத்து உடுக்கடிப்பது வழக்கமாகும்.

சணல், காகிதம், கண்ணாடி, மரம் ஆகியவற்றால் செய்யப்பட்ட குதிரைக்கூடுகளை அணிந்துகொண்டு குதிரைகளில் ஏறிச் சவாரி செய்வதுபோல் ஆண்களும் பெண்களும் ராஜா, ராணி வேடமணிந்து ஆடுவது பொய்க்கால் குதிரையாட்டம் அல்லது புரவி ஆட்டமாகும். அனுமான்போல வேடமணிந்து அனுமான் ஆட்டமும், மயிலின் தோகைகளைக் கட்டி மயில்போல மயிலாட்டமும் புலியைப் போல வேடமணிந்து புலியாட்டமும் ஆடப்படுவதுண்டு. தோட்டங்களில் சிலம்படியும் பிரபல்யம் பெற்றிருந்தது. தற்பாதுகாப்புக்காகவும் விளையாட்டுக்காகவும் மக்கள் சிலம்படியைப் பயின்றனர். (62)

## வாழ்க்கை வட்டச் சடங்குகள்

வாழ்க்கை வட்டத்துடன் தொடர்புடைய சடங்குகள் தோட்டங்களில் வாழும் இந்துக்கள் மத்தியில் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப் படுகின்றன. இவை வாழ்வில் ஏற்படும் இன்பதுன்ப நிகழ்ச்சிகளுடனும் நிலைகளுடனும் தொடர்புடைய சடங்குகளாகவும் நம்பிக்கைகளாகவும் பழக்க வழக்கங்களாகவும் உள்ளதுடன் இச்சடங்குகளை மேற்கொள்வோர்களது பொருளாதாரநிலை, மத நம்பிக்கை, சாதி என்பனவற்றிற்கேற்ப அவை வேறுபட்டும் உள்ளன. பிறப்பிற்கு முன்பிருந்து இறப்பிற்குப் பின்வரை இச்சடங்குகள் மேற்கொள்ளப் படுகின்றன. (63)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரு உருவாவதற்கு முன்னரே தமது இஷ்ட தெய்வங்களை வேண்டி நேர்த்திக்கடன் வைக்கப்படுவதுண்டு. மகப்பேறு மேற்கொள்ளப்படவுள்ள அறையில் சிறிது அரிசி அல்லது நெல், செப்புப் பாத்திரம், தேங்காய் என்பன வைப்பதுடன் கொடிய, கெட்ட ஆவிகளைத் துரத்துவதற்காக வேப்பிலை கட்டித் தூக்குவதும் மரபாகும். மகப்பேற்றின் பின்னர் 'தீட்டு' எனக் கருதப்படும் நாட்கள் சாதிக்கேற்ப வேறுபடுகின்றன. பிராமணருக்குப் பதினொரு நாட்களும், சத்திரியருக்குப் பதினாறு நாட்களும், வைசியருக்கு இருபத்தியொரு நாட்களும், சூத்திரருக்கு முப்பத்தியொரு நாட்களும் அசுத்த நாட்களாகக் கருதப்படுகின்றன. சாதி வேறுபாடின்றிப் பன்னிரண்டாவது அல்லது பதினாறாவது நாளன்று தாயையும் குழந்தையையும் குளிப்பாட்டுவதுண்டு. நல்லதோர் நாளில் சாத்திரியார் மூலம், அல்லது பண்டாரத்தின் மூலம் குழந்தையின் சாதகம் கணிக்கப்படும்போது (ஜாதகர்மம்) பெரும்பாலும் உயிருடன் இல்லாத மிக நெருங்கிய உறவினர் ஒருவருடைய பெயர், அல்லது தமது குலதெய்வத்தின் பெயர், அல்லது நேர்த்திக்கடன் வைத்த தெய்வத்தின் பெயர் சூட்டப்படும். மாரியம்மனுக்கு நேர்த்திக்கடன் வைத்திருப்பின் மாரி என்னும் சொல் பெயரில் இடம்பெறும். முதலாவது குழந்தைக்குப் பெயரிடும் வைபவத்தின்போது குழந்தையின் தகப்பனாரது பெற்றோரும் அவரின் சகோதர சகோதரிகளும் அழைக்கப்பட்டு மிக எளிமையான சடங்கு நடைபெறும். குழந்தைப் பருவத்தில் முதல் தடவையாக அன்னம் ஊட்டும் வைபவம் 'அன்னப்பிரசானம்' எனப்படும். பெரும்பாலான ஆண் குழந்தைகளின் காதும் பெண்குழந்தைகளின் காதும் மூக்கும் குத்தப்படும் 'காது குத்துக் கல்யாணம்' அல்லது கர்ணம் குழந்தை பிறந்து ஒரு வருடத்துள் பண்டாரம், அல்லது பிராமணர் ஒருவருடன் கலந்தாலோசித்து சுபநேரத்தில் நடத்தப்படும். மிக நெருங்கிய உறவினர்கள் மாத்திரம் இக்காது குத்தும் கல்யாணத்தில் கலந்துகொள்வர். 'சஊலம்' எனப்படும் முடியிறக்கும் வைபவம் பெரும்பாலும் தாம் நேர்ந்த தெய்வத்தின் சந்நிதானத்தில் மேற்கொள்ளப்படும். வசதியுடையோர் கதிர்காமம் அல்லது சிவனொளி பாதம் சென்று முடியிறக்குவதுண்டு. குழந்தை கல்வி கற்க ஆரம்பிக்கும் வித்தியாரம்ப வைபவமும் முக்கிய நிகழ்ச்சியாகக் கருதப்படுகின்றது. பெண்பிள்ளைகள் ருதுவாகி ஏழாவது அல்லது பதினோராவது நாளில் 'சாமத்தியக் கல்யாணம்', அல்லது 'சாமத்தியச் சடங்கு', அல்லது 'தண்ணிவார்த்தல்' நடைபெறும். பெண்பிள்ளைகள் ருதுவானதும் ஒரு சில நாட்களுக்குத் தனியே ஒதுக்கிவைக்கப்பட்டு ருது சடங்கன்று மூன்று அல்லது ஐந்து சுமங்கலிப் பெண்களால் 'குளிப்பாட்டப்பட்டுத்' தாயின் சகோதரனான தாய்மாமனாலும் நெருங்கிய உறவினர்களாலும் ஆசீர்வதிக்கப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதி, செய்தொழில்கள், அந்தஸ்து, பொருளாதாரநிலை என்பவற்றிற்கேற்பத் திருமணச்சடங்கு முறைகள் வேறுபடுகின்றன. பெரும்பாலும் ஒரே சாதியைச் சேர்ந்தவர்களுக்கிடையிலே திருமண உறவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. திருமணம் நிச்சயிக்கப்பட்டதும் 'பரிசப்பணம்', புடவை, வெற்றிலை, வாழைப்பழம் என்பனவற்றுடன் மாப்பிள்ளை வீட்டாரால் பெண் வீட்டாருக்குக் கொடுக்கப்படும். சீதனமுறை தோட்டங்களில் வாழும் இந்துக்களிடையே காணப்படுவதில்லை. தோட்டத் தொழிலாளரிடையே பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் அதிகமின்மையாலும், பெண்கள் உழைப்பதாலும் சீதன முறை இல்லாததை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. ஆணின் வீட்டில் அல்லது கோவில் மண்டபத்தில் திருமணம் நடைபெறும். கோவிலில் நடைபெறும் திருமணங்களைப் பண்டாரம் அல்லது ஐயர் முன்னின்று நடாத்துவார். மணப்பெண்ணின் கழுத்தில் மணமகன் தாலி கட்டுவது முக்கியமான சடங்காகக் கருதப்படும்.

தோட்டங்களில் மரணச்சடங்குகள் சமூக நடவடிக்கையாகவும் கிரியையாகவும் மேற்கொள்ளப்படுகின்றன. பிணத்தினை எரிக்காது புதைப்பது வழக்கம். சில தசாப்தங்களுக்கு முன் தகனம் செய்யப்பட்டதாகவும் விறகுத் தட்டுப்பாட்டினால் ஏற்பட்ட செலவின் நிமித்தம் புதைக்கும் வழக்கம் ஏற்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இறந்தவரின் வயது, திருமண அந்தஸ்து, சாதி என்பவற்றிற்கேற்ப மரணச்சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன. தாழ்த்தப்பட்டவர்களுக்கும் குழந்தைகளுக்கும் திருமணமாகாதவர்களுக்கும் கிரியைகளும் சடங்குகளும் குறைவாக இருந்தன. . சிலர் இறப்புச் செய்தியைத் தோட்டத்திலுள்ள ஏனையோருக்கு அறிவிப்பர். நெருங்கிய உறவினருக்குக் குடும்பத்திலுள்ள ஒருவர் செய்தி அனுப்புவார். சிகையலங்காரம் செய்வோருக்கும் சலவைத் தொழிலாளிக்கும் அறிவிக்கப்படும். திருமணமானவர் இறந்தால் அவரின் பிள்ளைகள் துக்கம் அனுட்டிப்போராக இருப்பர். முக்கியமாக ஆண் பிள்ளைகள் கடமைகளையும் கிரியைகளையும் செய்வர். புதைக்குமுன் இறந்தவரைச் சிலரின் உதவியுடன் குளிப்பாட்டுவது வழக்கம். காற் பெருவிரல்களும் கைகளும் ஒன்றாகக் கட்டப்படும். பிரேதத்தை வீட்டிலிருந்து அகற்ற முன் நெருங்கிய உறவினர்கள் பிரேதத்தை மூன்று முறை வலம்வருவர். சிலர் இறந்தவரது கையை சாணத்தில் பதித்துப் பின்னர் அச்சாணத்தைச் சுட்டுத் திருநீறு செய்து வீட்டில் இறந்தவர் நினைவாகப் பாதுகாத்து வைப்பதுண்டு. மயானத்துக்குப் பெண்கள் செல்லும் வழக்கமில்லை. கணவன் இறந்தால் மனைவி தாலியைக் கழற்றுவது வழக்கம். பிரேதத்தினை அடக்கம் செய்ய முன் சடங்கைச் செய்வர். தேங்காய், வெற்றிலை, பாக்கு, அரிசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலான பொருட்களை இறந்தவருக்கு வைக்க உறவினர்கள் 'வாய்க்கரிசி' இடுவர். சில தோட்டங்களில் 'மொய்' வழங்கப்படும். சில நாட்களுக்குச் சாவீட்டில் உணவு சமைப்பதற்காக நெருப்பு எரிப்பதில்லை. புதைத்து மூன்றாம்நாள், அல்லது பதின்மூன்றாம் நாள் மட்பானையில் உணவு, பால் என்பன எடுத்துச் செல்லப்பட்டு இறந்தவருக்குக் கருமாதி செய்யப்படும். ஒரு வருடத்தின் பின்னர் 'திவச' நாளன்று இறந்தவரை நினைத்துப் படைத்து உண்பது வழக்கமாகும். முதலாவது திவசம் வரை இறந்தவரது வீட்டில் மங்களகரமான கருமங்கள் ஆற்றக்கூடாதென்பது மரபாகும். வசதியுள்ளோர் புதைகுழியின்மேல் நினைவுச்சின்னமாக மேடையொன்று கட்டி இறந்தவரைப் பற்றிய விவரங்களை எழுதுவர். தோட்டங்களில் வாழ்ந்து இறந்த பெரிய கங்காணிமார் சிலருக்கு இவ்வாறு நினைவுச்சின்னங்கள் கட்டப்பட்டுள்ளன. கர்ப்பமாகி வயிற்றுச்சிசுவுடன் இறந்த சில பெண்களது ஞாபகமாகச் சுமைதாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன. (64)

## நம்பிக்கைகள்

மந்திரம், மாயம், பில்லி, சூனியம் பேயோட்டல் என்பனவற்றிலும் தோட்ட மக்களுக்கு நம்பிக்கைகள் உள்ளன. நோயுறும் போதும் எதிரிகளின் தீய பார்வை, செயல்களிலிருந்து தம்மைப் பாதுகாக்கவும் மந்திரித்துச் சாமி பார்ப்பர். உடுக்கடித்துப் பேயோட்டுவதும் உண்டு. இம்முறைகள் உயர்நிலப் பிரதேசத்திலும் இடை நிலப் பிரதேசத்திலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. தாழ்நிலப் பிரதேசத்தில் இம்முறைகள் அருகிவருகின்றன. (அட்டவணை : 2) தோட்டங்களில் சில தசாப்தங்களுக்கு முன்னர் பச்சை குத்தும் வழக்கமும் இருந்தது. (...)

வயதுக்கேற்ப ஆபரணங்கள் அணியும் வழக்கம் காணப்பட்டது. மேலிடு, மாட்டல், தெங்காஞ்சி, தண்டட்டி, தொங்கட்டான், குப்பி, சுற்றி, சினுக்கி, போறை, பொலுடு, பட்டம், மூக்குத்தி, கோப்பு, நாகபடம், சாவடி, அட்டிகை, நேலி, கன்கனம், கடகம், ஒட்டியாணம், தண்டை, சலங்கை, பதக்கம், கொலுசு, நிகமுடி, பீலி, முந்தாங்கி, மிலாடி மகரமீன், மோதிரம் முதலானவற்றைப் பெண்களும் ஒற்று, கடுக்கன், முருகு என்பனவற்றை ஆண்களும் அணிந்தனர். (...) இவற்றுள் பெரும்பாலான ஆபரணங்கள் தற்போது அணியப்படுவதில்லை.

உயர்நிலப் பிரதேசத்திலும் இடைநிலப் பிரதேசத்திலும் மத நம்பிக்கைகளும் சடங்குகளும் ஓரளவுக்குப் பேணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அட்டவணை : 2

ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இலங்கைப் பெருந்தோட்டங்களில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற சமய நடவடிக்கைகள் (விகிதத்தில்)

| சமய நடவடிக்கைகள் | உயர் நிலப் பிரதேசம் n = 6 | இடைநிலப் பிரதேசம் n = 6 | தாழ் நிலப் பிரதேசம் n = 6 | மூன்று பிரதேசங்களிலும் n = 18 |
|---|---|---|---|---|
| திருவிழா | 6 : 6 | 6 : 4 | 6 : 2 | 18 : 12 |
| தீமிதிப்பு | 6 : 3 | 6 : 1 | 6 : 1 | 18 : 5 |
| காவடி | 6 : 6 | 6 : 6 | 6 : 2 | 18 : 14 |
| கரகம் | 6 : 6 | 6 : 5 | 6 : 1 | 18 : 12 |
| கூத்து | 6 : 3 | 6 : 5 | 6 : 0 | 18 : 8 |
| பஜனை | 6 : 6 | 6 : 6 | 6 : 1 | 18 : 13 |
| கோலமிடல் | 6 : 6 | 6 : 6 | 6 : 3 | 18 : 15 |
| சாமி பார்த்தல் | 6 . 6 | 6 : 6 | 6 : 5 | 18 : 17 |
| பேயோட்டல் | 6 : 4 | 6 : 4 | 6 : 1 | 18 : 9 |

n - ஆய்வு மேற்கொள்ளப்பட்ட தோட்டங்களின் எண்ணிக்கை.
ஆதாரம் : வெளிக்கள, ஆய்வு, 1981.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை : 3**

1981 ஆம் ஆண்டில் இலங்கைப் பெருந்தோட்டங்களில் செயற்பட்ட சமய மன்றங்களில் அங்கத்தவர்களாக இருந்த 15 வயதுக்கு மேற்பட்ட இந்திய வம்சாழியினரின் சதவீதம்.

| | உயர் நிலப் பிரதேசம் | இடைநிலப் பிரதேசம் | தாழ்நிலப் பிரதேசம் | மூன்று பிரதேசங்களிலும் |
|---|---|---|---|---|
| ஆண்கள் | n = 356 | n = 155 | n = 39 | n = 550 |
| அங்கத்தவர்கள் | 7.02 | 5.16 | 0 | 6.00 |
| பெண்கள் | n = 319 | n = 147 | n = 42 | n = 508 |
| அங்கத்தவர்கள் | 0.31 | 0 | 0 | 0.19 |
| இருபாலாரும் | n = 675 | n = 502 | n = 81 | n = 1058 |
| அங்கத்தவர்கள் | 3.85 | 2.64 | 0 | 3.21 |

n - 15 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை.

ஆதாரம் : வெளிக்கள ஆய்வு, 1981



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்நிலப் பிரதேசத்தில் இவற்றின் செல்வாக்கு வெகுவாகக் குறைந்துள்ளது. (அட்டவணை : 2)

## இந்து நிறுவனங்கள்

பெருந்தோட்டங்களில் விவேகானந்தசபை, இராமகிருஷ்ண சபை போன்ற இந்து நிறுவனங்களின் செல்வாக்கு மிகக் குறைவாகவுள்ளது இந்து இளைஞர் பேரவை, மன்றங்கள் என்பன இங்கு அமைக்கப்படுவதில்லை. தோட்டங்களிலுள்ள கோவில்களை நிர்வகிப்பதற்கும் நவராத்திரி, திருவிழா, கோவில் கும்பாபிஷேகம் என்பனவற்றை ஒழுங்குசெய்து நடாத்துவதற்குமென மன்றங்கள் அல்லது சபைகள் செயற்படுகின்றன. தோட்டங்களில் அமைக்கப்படும் இம் மன்றங்களில் ஆண்களே பெருமளவில் அங்கம் வகிக்கின்றனர், பெண்கள் அங்கம் வகிப்பது குறைவு. 15 வயதுக்கு மேற்பட்ட ஆண்களில் உயர்நிலப் பிரதேசத்தில் 7.02 சதவீதமானவர்களும், இடைநிலப் பிரதேசத்தில் 5.16 சதவீதமானவர்களும் மத மன்றங்களின் அங்கத்தவர்களாக இருந்தனர். தாழ்நிலப் பிரதேசத்தில் இம்மன்றங்கள் முக்கியத்துவம் இழந்து காணப்பட்டன: (அட்டவணை : 3)

## பிரதேசங்கள் பெற்ற புள்ளிகளும் வகித்த இடமும்

மத மன்றங்கள், சங்கங்கள் என்பனவற்றில் அங்கத்துவம் வகித்தோரைப் பொறுத்தளவில் உயர் நிலப் பிரதேசம் 0.16 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்திலும் இடைநிலப் பிரதேசம் 0.10 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலும் தாழ் நிலப் பிரதேசம் 0.02 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்திலும் விளங்கின. மூன்று பிரதேசங்களினதும் சராசரிப் புள்ளிகள் 0.09 ஆக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறிப்புகளும் உசாவியவையும்


1. Rulph Pieris, 1976: *Social Development and Planning in Asia*, Abhinav Publications, New Delhi. p. 264.

2. ம. சு. கோபாலகிருஷ்ணன், 1963: மானிடவியல், தமிழ் வெளியீட்டுக் கழகம், சென்னை. ப 181.

3. பண்பாடு பற்றிய விளக்கங்களுக்கு: Philip L. Wagner and Marvin W. Mikesell (eds), 1971: *Readings in Cultural Geography*, The University of Chicago Press, Chicago. p p. 9, 13.

4. S. B. D. de Silva, 1982: *The Political Economy of Underdevelopment*, Routledge and Kegan Paul, London. p. 330.

5. Government of India, 1917: *Report on Indian Labour Emigrating to Ceylon and Malaya*, Government Press, Madras. p. 22.

6. Paul Fickeler, 1971; 'Fundamental Questions in the Geography of Religions' in Philip L. Wagner and Marvin W. Mikesell (eds.) மே. கு. நூல்.

7. வ. தேவராஜ், 1980: 'தேயிலைத் தோட்டமொன்றின் சமயமும் சமூகமும்', இலங்கைத் தமிழ் நாட்டார் வழக்கியல், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம். ப. 221.

8. பெருநெறி, சிறுநெறி என இரண்டு விதமான மரபுகள் உள்ளன. இரா. சீனிவாசன், 1975: சக்தி வழிபாடு, ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், நாகர் கோவில். ப. 62.

9. J. N. Farquhar, 1912: *A. Primer of Hinduism*, Christian Literature Society for India, Londan. p. 183.

10. S. R. Balasubrahmanyam, 1966 : *Early Chola Art*, Part 1, Asia Publishing House, London. p. 1




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. Wilber Theodore Elmore, 1915: *Dravidton Gods in Modern Hinduism: A Study of the Local and Village Deities of South India*, Hamilton, New York, p p. 15-32;

Henry Whitehead, 1921: *Village Gods of South India*, Association Press, Culcutta, p. 98;

Stephen Inglis, 1980: *A Village Art of South India*, Madurai Kumaraj University, Madurai. p. 21

12. C. V. Velupillai, 1970 : *Born to Labour*, M. D. Gunasena, Colombo. p p. 64 - 68.

13. James Cartman, 1957 : *Hinduism in Ceylon*, Gunasena, Colombo. p p. 76 - 77;

M. D. Raghavan, 1967 : *Sinhala Natum Dances of the* Sinhalese, Gunasena, Colombo. p. 124;

Gananath Obeyesekere, 1984 :

*The Cult of the Goddess Pattini*, The University of Chicago Press, Chicago.

இரா. வை கனகரத்தினம், 1984 : 'ஈழநாட்டிற் கண்ணகி வழிபாடு ஓர் ஆய்வு', தமிழியல், தமிழியல் ஆய்வுக்கான சருவதேச நிறுவனம், சென்னை. பக். 99 - 127.

14. ''தமிழ்ச் சமூக அமைப்பில் விதந்தோதப்பட வேண்டிய இன்னொரு முக்கிய அம்சம் (உண்மையில் இதுவே மிக முக்கியமானதாகும்) இச் சமூக அமைப்பின் அதிகார வரன் முறை நிலைப்பாடாகும். ஒவ்வொரு கிராமத்திலும் வசிக்கும் மக்கள் சாதிவாரியாகப் பிரிக்கப்படுவர். அவர்கள் அதிகாரம், செல்வாக்கு, அந்தஸ்து ஆகியன அக்குடியிருப்பிலேயுள்ள சாதி வைப்பு முறைக்கேற்ப அமைந்திருக்கும். இந்தச் சாதி வைப்பு முறைக்கும் உற்பத்தி முறைமைக்கும் இயைவு உண்டு. இத்தகைய சமூக அமைப்புக் கோலத்துள் இயங்கும் மனிதனை ''அதிகார வரன் முறைப்பட நிற்கும் மனிதன்'' என லூயி துமோஸ் எனும் அறிஞர் கூறுவார். இந்த அதிகார வரன் முறையை எவரும் மீறுவதில்லை. அப்படி யாராவது ஒருவன் வெற்றிகரமாக மீறினால் அவனை மேநிலைப்படுத்திக் கூறி விடுவதுண்டு அப்படி மீறுபவர்கள் பெரும்பாலும் நாட்டார் நிலை வீரர்களாகவே இருப்பர். காத்தவராயன், மதுரை வீரன் முதலியோரை உதாரணமாகக் கூறலாம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காா. சிவத்தம்பி, *1983* : தமிழ்ச் சமூகமும் அதன் சினிமாவும், சென்னை புக்ஹவுஸ், சென்னை. பக். *40 – 41.*

*15.* நா. வானமாமலை, *1981* : 'தமிழ் நாட்டுக் கதைப் பாடல்களில் சோக முடிவு', நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுகள், தொகுதி ஒன்று, தெ. லூர்து (பதிப்பாசிரியர்), பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி. பக். *92 – 93.*

*16.* நா. வானமாமலை, *1981* : மேலது நூல், பக். *102*

*17.* F. R. Hemingway, 1907 : *Trichinopoly, Madras District Gazetteers,* Government Press, Madras, p. 89;

Henry Whitehead, 1921 : மே. கு. நூல். p p. 25.33, 89,92, -93;

தமிழ் வளர்ச்சிக் கழகம், *1956* : கலைக்களஞ்சியம், (தொகுதி *8*) தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை. ப. *97*;

N. Vanamamalai, 1981 : 'Folklore Studies in Tamil Language', *Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies,* Vol. 2, International Association of Tamil Research, Madras pp. *10 - 18;*

Stephen Inglis, 1980 : மே. கு. நூல். p. 17;

சீ. வி. வேலுப்பிள்ளை, *1983* : மலைநாட்டு மக்கள் பாடல்கள் கலைஞன் பதிப்பகம், சென்னை. பக். *77 – 78.*

*18.* புகழேந்திப் புலவர், *1972* : மதுரை வீரசுவாமி கதை, இரத்தின நாயகர் சன்ஸ், சென்னை. ப. *64.*

*19.* Lewis Green, 1926 : *The Planter's Book of Caste and Custom,* Times of Ceylon, Colombo. p. 30.

சீ. வி. வேலுப்பிள்ளை, *1983* : மே. கு. நூல். ப. *85.*

*20.* Bryan Pfaffenberger, 1982 : *Caste in Tamil Culture,* Vikas Publishing House, New Delhi. p p. 180 - 183.

*21.* முனி வழிபாடு யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் பிற பாகங்களிலும் இருந்துள்ளது.

க. கணபதிப்பிள்ளை, *1962* : ஈழத்து வாழ்வும் வளமும் பாரி நிலையம், சென்னை. பக். *53 - 54.*

*22.* F. R. Hemingway, 1907 : மே. கு. நூல். p p. 81 - 90;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Henry Whitehead, 1921: மே. கு. நூல். p p. 23, 101-102, 108, 114; Stephen Inglis, 1980 : மே. கு. நூல். p p. 18, 20, 21.

23. C. V. Velupillai, 1970 : மே. கு. நூல். p p. 66.

24. வ. தேவராஜ், 1980 : மே. கு. நூல். ப. 208.

25. Edgar Thurston, 1912 : *Omens and Superstitions of Southern India*, T. Fisher Urwin, London. p p.121 - 136.

26. நா. முத்தையா, 1980 : ஈழத்துச் சித்தர்கள், ஆத்மஜோதி அச்சகம், நாவலப்பிட்டி.

27. நா. முத்தையா, 1980 : மேலது நூலில் க. கைலாசபதி எழுதிய மதிப்புரை.

28. த. சண்முகசுந்தரம், 1977 : 'ஈழத்தில் சைவக் கிராமிய வழிபாடு' நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு நிகழ்ச்சிகள், முதலாம் தொகுதி, அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக் கிளை, கொழும்பு. ப. 64.

29. ஆய்வு மேற்கொள்ளப்பட்ட டெல்ரா (புப்புரஸ்ஸ) கோடன் (உடப்புசல்லாவை) தோட்டங்களில் உள்ள கோவில்களில் காந்திக்கு சிலைகள் நிறுவப்பட்டுள்ளன. வலபொட (பலாங்கொட) தோட்டத்திற்குச் செல்லும் சந்தியிலும் காந்தி சிலையுள்ளது. கவுபே (காவத்தை) தோட்டத்திலுள்ள கோவில் சுவரில் காந்தியையும் நேருவையும் வரைந்துள்ளனர்.

30. தோட்டங்களில் கொடிய வறட்சி நிலவும் போது சுமங்கலிப் பெண்கள் நிறை குடங்களில் நீர் கொண்டு சென்று மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்தால் மழை பெய்யும் என்ற நம்பிக்கை உளது.

மாரியம்மன் பற்றிய விளக்கங்களுக்கு :

F. R. Hemingway, 1907 : மே. கு. நூல். p. 90 ;

Wilber Theodore Elmore, 1915; மே. கு. நூல். p. 20;

Henry Whitehead, 1921 . மே. கு. நூல். p p. 19, 29, 30, 32, 45, 80, 86, 88, 90 - 94, 106, 115 - 117.

31. Lewis Green, 1926 : மே. கு. நூல். p. 29.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

32. சி. தில்லைநாதன் 1977: 'மலையக இந்துக்களின் தெய்வங்களும் வழிபாடுகளும்,' இந்து தருமம், இலங்கைப் பல்கலைக்கழகம், பேராதனை. பக். 49 - 50;

J. A. Dubois, 1879 : *The People of India*, Higginbotham, Madras. p. 339;

Henry Whitehead, 1921 : மே. கு. நூல். p. 31;

James Cartman, 1957 : மே. கு. நூல். p p. 74 - 75.

33. பி. எல். சாமி, 1971 : 'வேலன் வழிபாடு' ஆராய்ச்சி, மலர் 3. இதழ். 2, பக். 294 - 301

34. ஆ. வேலுப்பிள்ளை, 1977: 'ஈழ நாட்டில் முருக வழிபாடு', இந்து தருமம், இந்து மாணவர் சங்கம், பேராதனை. பக். 13 - 18;

ஆ. வேலுப்பிள்ளை, 1980: தமிழர் சமய வரலாறு, பாரி புத்தகப் பண்ணை, சென்னை. ப. 229.

35. James Cartman 1957: மே. கு. நூல். p. 68.

36. கயிலாயத்தில் இருந்த சிவகிரி, சத்திகிரி என்னும் இரு மலைகளை பொதிகை மலையில் இருந்த அகத்திய முனிவரிடம் சேர்ப்பிக்கும் படி இடும்பாசுரனுக்கு சிவபெருமான் ஆணையிட்டார் எனவும், இம் மலைகளைக் காவடி போல் கட்டித்தூக்கி வந்த இடும்பன் பழநியில் களைப்படைந்து இறக்கி வைத்து முருகனின் வாயில் காவலனாக இருக்க வரம் வேண்டி இவ்வாறே முருகனது வாயில் காவலனாகினான் என்னும் ஐதீகம் தென்னிந்திய இந்துக்களிடையே நிலவுகின்றது. சோமலே (எஸ். எம். எல். லட்சுமணன் செட்டியார்), 1975: தமிழ் நாட்டு மக்களின் மரபும் பண்பாடும், நெஷனல் புக் டிரஸ்ட், இந்தியா. பக். 193 - 194.

37. கோவில் கோபுரங்களில் சிற்பங்களை அமைத்தவர்களது கற்பனைக் கேற்ப வேறுபட்ட சிற்பங்கள் வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

38. சிறந்த உதாரணமாகப் பண்டாரவளை கிறேக் தோட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள சிவ சுப்பிரமணியர் ஆலயம் திகழ்கின்றது.

39. நாட்டுக் கோட்டைச் செட்டிமார் பற்றிய விளக்கங்களுக்கு:

W. S. Weerasooria, 1973: *The Nattu kottai Chettiar: Merchant Bankers in Ceylon*, Tisara Prakasakayo, Dehiwala. p. 155;

Haraprasad Chattopadhyaya, 1979: *Indians in Sri Lanka*. O. P. S. Publishers, Calcutta. p p. 149 - 166;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமலே (எஸ். எம். எல். லட்சுமணன் செட்டியார்), 1979: அலை கடலுக்கு அப்பாலும் நகரத்தார்களின் ஆலயப் பணிகள், சோமு நூலகம், சென்னை. ப. 25.

40. மாரியம்மன் விழாவில் முதல் நாளன்று ஆற்றங்கரைக்குச் சென்று 'கரகம் பாலித்தல்' என்னும் சடங்கு நடைபெறும்.

41. சு. திருச்செந்தூரன், 1976; 'மலை நாடும் ஆலய வழிபாடும்', திருவருள், பதுளை இந்து மகா சபை, பதுளை. ப. 35.

42. தமிழ் மாதங்களில் இவ் விழாக்கள் கொண்டாடப்படுவதால் ஆங்கில மாதப் பெயர்கள் தரப்படாது தமிழ் மாதப் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

43. P. V. Jagadisa Ayyar, 1921: *South Indian Festivities*, Higginbothams Ltd., Madras;

M. M. Uuderhill, *1921*: *The Hindu Religious year*, Association Press, Calcutta;

B. Lewis Green, *1926*: மே. கு. நூல் p p. *22 - 26;*

C. Sivaratnam, *1964*: *An Outline of the Cultural History and Principles of Hinduism*, Stangard Printers, Colombo. p p. *214 - 220;*

C. S. Navaratnam *1964*: *A Short History of Hinduism in Ceylon and Three Essays on the Tamils*, Sri Shanmuganatha Press, Jaffna. p p. *90 - 100*.

44. விஷ்ணுவின் அவதாரமாகப் புத்தர் கருதப்படுகின்றார்.
Charles Eliot, *1957*: *Hinduism and Buddhism An Historical Sketch*, Vol. 2. Routledge and Kegan Paul Ltd., London. p. *148*.

45. B. Lewis Green, *1926*: மே. கு. நூல். p. *26*.

46. ஹூட்டன், கொட்டகலை, நூரி, கலுப்பானை, பனுகல, அலுகொல்ல ஆகிய தோட்டங்களில் மலையாளிகள் வசிக்கின்றனர்.

47. சொக்கப்பனை கொளுத்தும் போது எரியும் நெருப்பினுள் பக்தியுடன் உப்பிட்டால் தோல் வியாதிகள் நீங்கி விடும் என்ற நம்பிக்கை சில இந்துக்களிடையே நிலவுகின்றது.

48. நா. முத்தையா, *1978*: பன்னிரு மாத நினைவுகள், ஆத்ம ஜோதி அச்சகம், நாவலப்பிட்டி. ப. *154*.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49. சில தோட்டங்களில் காமன் பண்டிகை (காமன் கூத்து) பதினைந்து நாட்கள் நடைபெறாது ஒரு சில நாட்களே நடைபெறுவது வழக்கம்.

50. சீ. வி. வேலுப்பிள்ளை (தொகுப்பாசிரியர்), 1983: மே. கு. நூல் பக். 87 - 88;

C. V. Velupillai, 1970: மே. கு. நூல், pp. 54 - 58.

51. 'லாவணி' என்பது இசைப்பாடலாக நடைபெறும் விவாதம்.

52. இவ் ஒப்பாரிப் பாடல்கள் பிரசுரிக்கப்பட்டுள்ளன.
(அ) திரிசிரபுரம் மங்களதாஸ் இயற்றிய நவீன நவரத்தின மதன ரதி ஒப்பாரி, சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு;

(ஆ) தியாகராஜ செட்டியார் இயற்றிய மன்மதன் ரதி ஜனன காண்டம் வில்லடிப் பாட்டு, சரஸ்வதி புத்தகசாலை, கொழும்பு.

53. (அ) சி. தில்லைநாதன், 1977: மே. கு. நூல். பக். 51 - 53;
சு. திருச்செந்தூரன், 1977: இலங்கை மலையகத் தமிழரின் நாட்க மரபும், காமன் கூத்தும், கல்வித்துறை, இலங்கைப் பல்கலைக்கழகம், கொழும்பு (பிரசுரிக்கப்படாதது) பக். 23 - 36.
(ஆ) தமிழ் நாட்டில் திருச்சி, இராமநாதபுரம், ஆகிய மாவட்டங்களில் காமன் கூத்து நடைபெறுவது வழக்கம்.

F. R. Hemingway, 1907: மே. கு. நூல். p.85
R. Jayaraman, 1966; 'The Kaman Festival Among the Tamilian Estate Labourers in Ceylon' *The Eastern Anthropologist* Vol. xix, No. 1. pp. 43 - 54;
R. Jayaraman, 1975: *Caste Continuities in Ceylon,* Popular Prakashan, Bombay. p p. 168 - 169.

54. தமிழ் நாட்டில் ஆடப்படும் தெருக்கூத்துக்களுடன் இவை நெருங்கிய தொடர்பு கொண்டவை.
Richard Frasca, 1981: 'Terukkuttu: The Traditional Theatre of Tamil Nadu,' *Proceedings of the Fifth International Conference Seminar of Tamil Studies,* Vol. 1, International Association of Tamil Research, Madras. p p. 5.46 - 5.47.

55. சு. திருச்செந்தூரன், 1977: மே. கு. நூல். பக் 16 - 17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56 S. Pathmanathan, 1979: 'The Hindu Society in Sri Lanka: Changed and Changing, in John Ross Carter (ed), Religiousness in Sri Lanka, Marga Institute, Colombo. p. 155.

57. R. Jayaraman, *1975* மே. கு. நூல். p. *168*.

58. M. D. Raghavan, No date: *Tamil Culture in Ceylon*, Kalai Nilayam, Colombo. pp. 274 - 275;
ஏ. என். பெருமாள், *1979:* தமிழ் நாடகம் - ஓர் ஆய்வு, தமிழ்ப் பதிப்பகம், சென்னை. பக். *11 - 14*.

59. C. V. Velupillai, 1970; மே. கு. நூல். pp. 43 - 46;
ஏ. என். பெருமாள், *1979:* மே. கு. நூல். ப. *14;*
சு. சண்முகசுந்தரம், *1982:* நாட்டுப்புற இயல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம் பக் *47 - 48*.

60. ஏ. என். பெருமாள், *1979:* மே. கு. நூல். பக். *14 - 15;*
சு. சண்முகசுந்தரம், *1982:* மே. கு. நூல். பக். *47*.

61. சு. சண்முகசுந்தரம், *1982:* மே. கு. நூல். பக். *45*.

62. மே தினக் கூட்டங்கள் நடாத்தப்படும் போது இவ் விளையாட்டுக்கள் விளையாடப்படுவது வழக்கம்.

63. F. R. Hemingway 1907: மே. கு. நூல். pp. 96 - 99;
M. Arunachalam, 1980: *Festivals of Tamil Nadu*, Gandhi Vidyalayam Tanjavur.

64. எடுத்துக்காட்டாக, வெலிமடை பண்டாரவளை பிரதான வீதியில் டைராபா தோட்டச் சந்தியில் சுமை தாங்கி அமைக்கப்பட்டுக் கல்லில் பின்வரும் விவரங்கள் பொறிக்கப்பட்டுள்ளன:

"வெங்கப்பூர் கிராம
ராமசாமி மகள்
கன்னியம்மாள் போட்ட
சுமைதாங்கி
டைராபா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பின்னிணைப்பு

## விவரத் திரட்டு

### தோட்டங்களில் வாழும் மக்களது மத நம்பிக்கைகள் பற்றிய விவரத் திரட்டு

தோட்டத்தின் பெயர் ........................................................

1. தோட்டத்திலுள்ள வழிபாட்டுத் தலங்களையும் அவை கட்டப் பட்ட வருடங்களையும் குறிப்பிடுக:
   1.1 இந்துத் தலங்கள்
   1.2 கிறீஸ்தவத் தலங்கள்
   1.3 இஸ்லாமியத் தலங்கள்
   1.4 பௌத்தத் தலங்கள்

2. சாதி அடிப்படையில் நிறுவப்பட்ட வழிபாட்டுத் தலங்களைக் குறிப்பிடுக:
   2.1 கோவில்களின் பெயர்களும் வழிபடப்படும் தெய்வங்களும்.
   2.2 எச் சாதியினரால்/குலத்தவர்களால் வழிபடப்படுகின்றன?

3. கட்டடங்கள் கட்டப்படாது வழிபடப்படுகின்ற சிறு தெய்வங்கள், தேவதைகள், குலதெய்வங்கள் பற்றிய விவரங்கள்:
   3.1 பெயர்கள்
   3.2 வழிபடும் முக்கிய நோக்கங்கள் யாவை?
   3.3 சிறு தெய்வங்களின் குணாம்சங்கள் யாவை?
   3.4 இவற்றுடன் தொடர்புடைய பிற நம்பிக்கைகளைக் குறிப்பிடுக.

4. ஒவ்வொரு தெய்வத்திற்கும் பூசை, வழிபாடு என்பன எவ்வாறு நடத்தப்படுகின்றன?
   4.1 தெய்வத்தின் பெயர்
   4 2 பூசை, வழிபாடு என்பன நாளாந்தம் நடைபெறுகின்றனவா?
   4.3 எக் கிழமைகளில் பூசை/வழிபாடு நடைபெறுகின்றது?
   4.4 இத்தெய்வத்திற்கு என மேற்கொள்ளப்படும் நேர்த்திக் கடன்கள் யாவை?
   4.5 நேர்த்திக் கடன்கள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படுகின்றன?
   4.6 இத் தெய்வத்திற்குப் பலியிடுவதாயின், பலியிடும் காலம் மாதங்கள், நேரம் யாவை?
   4.7 பலியிடுவதற்குத் தேவையான பொருட்கள் யாவை?
   4.8 பலியிடும் முறையினைச் சுருக்கமாக விளக்குக
   4.9 இத் தெய்வத்திற்கு எம் மாதங்களில் திருவிழாக்கள் நடாத்தப்படுகின்றன?
   4.10 எத்தனை நாட்களுக்குத் திருவிழா நடாத்தப்படும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| 5. பின்வருவன நடைபெறின் | நடைபெறும் மாதம்/ மாதங்கள் | கடைசியாக நடைபெற்ற வருடம் |
|---|---|---|
| 5.1 தீ மிதிப்பு ... | .................. | .................. |
| 5.2 காவடி ... | .................. | .................. |
| 5.3 கரகம் ... | .................. | .................. |
| 5.4 காமன் கூத்து ... | .................. | .................. |
| 5.5 வேறு கூத்துக்கள் ... | .................. | .................. |
| 5.6 பஜனை ... | .................. | .................. |
| 5.7 கோலமிடல் ... | .................. | .................. |
| 5.8 வில்லுப்பாட்டு ... | .................. | .................. |
| 5.9 கதாப்பிரசங்கம் ... | .................. | .................. |
| 5.10 கோவில் திருவிழா ... | .................. | .................. |
| 5.11 சாமி பார்த்தல் ... | .................. | .................. |
| 5.12 பேயோட்டல் ... | .................. | .................. |
| பிற:- | | |
| .................................... | .................. | .................. |
| .................................... | .................. | .................. |
| .................................... | .................. | .................. |
| .................................... | .................. | .................. |
| .................................... | .................. | .................. |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையக மக்களின் குல தெய்வங்கள், சிறு தெய்வங்கள், உயிரின வழிபாடு, தென்புலத்தார் வழிபாடு, பெருந் தெய்வ வழிபாடு, காவல் தெய்வங்கள், தோட்டக் கோவில்கள், நகர்ப்புறக் கோவில்கள், விழாக்கள், விரத நாட்கள், காமன் பண்டிகை, அர்ச்சுனன் தபசு, பொன்னர் சங்கர் கூத்துக்கள், வாழ்க்கை வட்டச் சடங்குகள், நம்பிக்கைகள் என்பன பற்றி இந்நூலில் விவரிக்கப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org